விடுதலைப்புலிகள்

குரல் 87 மார்கழி 1998 அன்பளிப்பு 5/-

* தலைவரின் சமாதான அழைப்பும் சந்திரிகாவின் போர் முனைப்பும்
* ஒட்டுசுட்டான் படைநகர்வு -
* யார் 'வந்தேறுகுடிகள்'
* மனவெளி அரங்கம்
* தலைவர் பிரபாகரனின் மாவீரர்நாள் செய்தி - சொல்கின்ற விடயங்கள் என்ன!
* குருதிச்சுவடுகள்
* உயிர்தரும் எதிகணைகள்
* கவிதை
* உலைக்களம்

# மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்திற்கு சந்திரிகா அரசு அஞ்சுவது ஏன்!

**சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த்தையின்போது மூன்றாந் தரப்பு மத்தியத்துவம் அவசியம் என புலிகள் இயக்கம் நீண்டகாலமாக வலியுறுத்திவருகின்றது. புலிகளின் இந்தக் கோரிக்கையை சந்திரிகா அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது.**

மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை புலிகள் ஏன் வற்புறுத்துகின்றனர்?

இதுவரை காலமும் சிங்கள அரசுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியையே கண்டுள்ளன. பேச்சு முறிவுகளுக்கு சிங்கள அரசாங்கங்களின் நேர்மையீனமும் - நயவஞ்சகப் போக்குமே காரணம்.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக பேச்சுவார்த்தை நாடகங்களை அரங்கேற்றி - பின்னர் அவை முறிவடையும் சூழலையும் உருவாக்கி - பேச்சை முறித்துவிட்டு பழியை புலிகள் மீது சுமத்திவிடும் கைங்கரியத்தையும் செய்வது சிங்கள அரசின் வழமை.

புலிகள் இயக்கம் உண்மை நிலையை சர்வதேச சமூகத்திற்கு விளக்க முற்படும்போது சிங்கள அரசின் பிரச்சாரபலம் அவற்றை அமுக்கிவிடுவது வழமை.

சிங்கள அரசு நடாத்தும் பேச்சுவார்த்தைகள் தீர்வை நோக்கிச் செல்வதில்லை என்பது ஒருபுறமிருக்க- புலிகளை சமாதான விரோதிகள் என்று முத்திரை குத்தவும், அரசு அவற்றைப் பயன்படுத்துகின்றது.

இந்நிலையில், புலிகளுக்கும் - சிங்கள அரசுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில் மூன்றாந்தரப்பு ஒன்று பங்கெடுத்துக் கொள்ளும்போது சிங்கள அரசின் சதிநோக்கம் ஈடுபடாது போகும் என்பதுடன் - அமைதிப் பேச்சுவார்த்தையும் ஆக்கபூர்வமானதாக அமையும் என்பதாலேயே புலிகள் இயக்கம் மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தைக் கோருகின்றது.

புலிகளின் இந்த அழைப்பை பெரும்பாலான நாடுகள் வரவேற்றுள்ளதுடன் மத்தியத்துவமாக செயற்படத் தயார் எனவும் அறிவித்துள்ளன. பிரிட்டன் - நோர்வே - அவுஸ்ரேலியா - தென்ஆபிரிக்கா போன்ற நாடுகள் மத்தியத்துவராக பங்குகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

இந்த மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை - சந்திரிகா அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வருவது ஏன்!

இதற்கு பல காரணிகள் உண்டு. ஒன்று, தமிழரின் இனப்பிரச்சனை சர்வதேச மயப்படுவதை சிங்கள அரசு விரும்பவில்லை,

இலங்கையின் இனப்பிரச்சனை என்பது ஒரு தேசியப் பிரச்சனை. ஆனால், இதை ஒரு உள்நாட்டுப் பிரச்சனை என்று பொத்திமூடி வைத்திருக்கவே அரசு முனைகின்றது. உள்நாட்டுப் பிரச்சனையை தனது அரசே தீர்த்துவைக்கும் - வெளியாரின் தலையீடு தேவையில்லை என அதற்கு நியாயம் கூறிவருகின்றது.

உண்மையில், தமிழரின் விடுதலைப்போராட்டம் சர்வதேசமயப்படுவதை தடுக்கவே மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை அரசு தவிர்க்கின்றது.

அத்துடன், தமிழரின் இனப்பிரச்சனையின் அடிப்படைகளை புரிந்து - அதன் போராட்ட நியாயப்பாடுளை அந்த மூன்றாந்தரப்பு ஏற்றுக்கொண்டு - தமிழினத்திற்கு சார்பான நிலைப்பாட்டை எடுத்துவிடும் என சந்திரிகா அரசு பயப்படுகின்றது.

இதேவேளை, தமிழரின் அரசியல் அபிலாசைகளான தாயகம் - தேசியம் - சுயநிர்ணயஉரிமை என்ற அரசியல் கோரிக்கைகளுக்கு ஆதரவாக அந்த மூன்றாந்தரப்பு இருந்துவிடும் என்றும் அரசு அஞ்சுகின்றது. ஏனெனில், இன்றைய உலகம் இத்தகைய அரசியல் கோட்பாடுகளை ஏற்று - நடைமுறைப்படுத்திவருகின்றது.

அதேவேளை, சர்வதேசசமூகத்தின் அனுதாபமும் - ஆதரவும் புலிகளுக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக - புலிகளை பயங்கரவாத அமைப்பாக உலகிற்கு சித்தரித்துக்காட்ட, சிங்கள அரசு மும்முரமாக முயற்சிக்கின்றது.

இந்த நிலையில் சர்வதேசசமூகத்தின் மத்தியத்துவத்தை ஏற்பதாயின் அதன்மூலம் புலிகள் இயக்கத்திற்கு சட்டபூர்வமான அரசியல் அங்கீகாரம் கிட்டிவிடும் என்றும் அரசு அஞ்சுகின்றது.

இந்தக் காரணிகளால் மூன்றாந் தரப்பு மத்தியத்துவம் என்ற அம்சத்தை சந்திரிகா அரசாங்கம் விடாப்பிடியாக நிராகரித்துவருகின்றது.

அதாவது, தமிழரின் இனப்பிரச்சனைக்கு அமைதிவழியில் ஒரு நீதியான நிரந்தரத்தீர்வுகாண சிங்கள அரசு விரும்பவில்லை என்பதையே மூன்றாந்தரப்பு மத்தியத்துவநிராகரிப்பு காட்டுகின்றது. ○



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# தலைவரின் சமாதான அழைப்பும் சந்திரிகாவின் போர் முனைப்பும்

இவ்வருட மாவீரர்நாள் செய்திவாயிலாக தலைவர் பிரபாகரன் அவர்கள் - சந்திரிகா அரசாங்கத்தை நோக்கி சமாதான அழைப்பை விடுத்துள்ளார்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவத்தின் கீழ் எந்தவித முன்நிபந்தனைகளும் இல்லாமல் சிங்கள அரசாங்கத்திற்கும் - புலிகள் இயக்கத்திற்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என தெரிவித்துள்ளார்

பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாகவும் - உண்மையானதாகவும் - நிரந்தர தீர்வைக் காணும் திடசிந்தையுடனும் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு ஏற்றவகையில் ஒரு சாதகமான புறச்சூழலை அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்றும் - தலைவர் - அரசைக் கோரியுள்ளார்.

இந்த புறச்சூழலை ஏற்படுத்தும் முகமாக சில முன் நிகழ்வுகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இராணுவத்தை திருப்பி அழைத்து - தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருண்மியத் தடைகளை அகற்றி தமிழர் - நிலத்தில் ஒரு இயல்பு நிலை கொண்டுவருவது அவசியம் எனவும் கோரியுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் சமாதான நிலைப்பாட்டை சிங்களத்தின் எதிர்க்கட்சி உட்பட பல சிங்கள - முஸ்லிம் அரசியல் கட்சிகளும் - பொது அமைப்புக்களும் - தமிழ்க்குழுக்களும் ஆதரித்துள்ளன.

இதேசமயம், வெளிநாட்டு இராஜதந்திரிகள் பிரபல்யமான பத்திரிகைகள் - மற்றும் அரசியல் நோக்கர்கள் என சர்வதேச உலகமும் தலைவரின் சமாதான அழைப்பை ஆதரித்து - கருத்து வெளியிட்டுள்ளன.

இவ்விதம், சிங்களதேசத்திலிருந்தும் - சர்வதேச சமூகத்திலிருந்தும் தலைவரின் சமாதான நிலைப்பாட்டுக்கு சாதகமான கருத்துக்கள் வந்துகொண்டிருக்கும்போது சந்திரிகா அம்மையாரோ எந்தவித பதிலும் கூறாது நீண்டநாட்கள் மௌனம் சாதித்தார். அதேவேளை, புதிய போர்முனை ஒன்றை ஒட்டுசுட்டான் பகுதியில் திறந்து தலைவரின் சமாதான அழைப்புக்கு பதில் கூறியிருந்தார்.

இதன்பின்னர், இந்திய பத்திரிகையாளர் ஒருவருக்கு - சந்திரிகா அம்மையார் - வழங்கிய செவ்வியில் தலைவர் பிரபாகரன் தெரிவித்த மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவத்தை நிராகரித்தார். அத்துடன், காலஎல்லை (Time Frame) என்ற ஒன்றை பேச்சுக்கு முன் நிபந்தனையாக விதித்தும் தலைவரின் சமாதான அழைப்பை நிராகரித்திருந்தார்.

போர்மூலம் தமிழரின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்ற அவரது இராணுவ அணுகுமுறையை தொடர்ந்தும் கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதையே இது காட்டுகின்றது.

தலைவரின் சமாதான அழைப்பை சிங்களத்தின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் உட்பட, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் நிராகரித்துக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சிங்களத்தின் புதிய இராணுவத்தளபதியாக, அண்மையில் பதவியேற்ற லெப் - ஜெனரல் சிறிலால் வீரசூரியாவும் போரைத் தொடர்வது பற்றியே தனது பதவியேற்பு வைபவத்தில் பிரகடனம் செய்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து சிங்கள இராணுவம் வெறியேறி பேச்சுக்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டும் என்ற தலைவரின் கோரிக்கையை - இராணுவத்தளபதி நிராகரித்திருந்தார். தான் கைப்பற்றிய தமிழர் நிலத்தில் ஒரு அங்குல நிலத்தைத்தானும் விட்டு இராணுவம் வெளியேறமாட்டாது என குறைத்துள்ளார். போரைத் தொடர்ந்து நடாத்தி புலிகளை நசுக்கப்போவதாக சபதம் செய்துள்ளார்.

இவ்விதம், தலைவரின் சமாதான அழைப்பு - சந்திரிகா அரசாங்கத்தின் அனைத்துத் தரப்பிலிருந்தும் நிராகரிக்கப் பட்டுவிட்டது. பதிலாக போர் முரசு கொட்டப்பட்டுள்ளது.

சிங்கள அரசின் இந்த கடும்போக்கு உலக சமூகத்திற்கு ஒரு உண்மையை உணர்த்துகின்றது அதாவது, புலிகள் இயக்கமும் தமிழ்மக்களும் என்னதான் சமாதான முயற்சிகளை விரும்பி - மேற்கொண்டாலும், சிங்களப்பேரினவாதமானது இராணுவத் தீர்விற்கே முன்னுரிமை கொடுத்துவருகின்றது. கடந்த 50 வருட காலமாக மாறி மாறி வந்த அரசாங்கங்கள் அனைத்தும் தமிழரின் இனப்பிரச்சனைக்கு அமைதிவழியில் தீர்வுகாண முயற்சிக்கவில்லை.

சிங்கள அரசின் இத்தகைய கடும்போக்கு மற்றும் நேர்மையற்ற தன்மைகள் காரணமாகவே தலைவர் அவர்கள், மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவத்தை வலியுறுத்திவருகின்றார். ஆகவே, புலிகள் இயக்கத்தின் அரசியல் நியாயப்பாட்டை புரிந்துகொண்டு, சர்வதேச உலகமானது, சந்திரிகா அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

அப்படி நடைபெறாது போனால், சிங்கள அரசு போரை தொடர்ந்து நடாத்திக்கொண்டே இருக்கும். தமிழர் நிலத்தில் அழிவுகளையும்- அவலங்களையும் தொடர்ந்து விதைத்துக் கொண்டே இருக்கும்.

இந்த அவலம் தொடருமானால் - மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் கூறியுள்ள ஒரு கருத்து உண்மையாக மாறும்.

அதாவது, ''தமிழீழத் தனியரசு உதயமாகும் புறச்சூழலை உருவாக்கித்தந்த வரலாற்றுப் பெருமை சிங்களப் பேரினவாதத்திற்கே சேரும்'' என்ற தலைவரின் கூற்று வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்க்கதரிசனமாக அமையும் என்பதில் ஐயமில்லை. ○

( 04ஆம் பக்கத் தொடர்ச்சி )

## யார் ..

துட்டகைமுனு கேட்டபோது ''மகாவலிகங்கைக்கு மறுபுறத்தை தமிழர் ஆளட்டும். இந்தப் பக்கத்திலுள்ள இடங்கள் எங்களுக்கு ஆள்வதற்குப் போதுமானவை '' என்று தந்தையார் கூறியிருந்தார் என மகாவம்சம் எழுதியுள்ளது. துட்டகைமுனு தந்தையாரின் கருத்தை ஏற்கவில்லை.

மேலும் அது தொடர்கின்றது. துட்டகைமுனுவின் முதற்போர் மகியங்கனையை ஆண்ட குறுநில தமிழ் மன்னனான சதன் என்பவனுடன் நடந்தது. இதன்பின், மகியங்கனையிலிருந்து அனுராதபுரம் வரையுமுள்ள 31 குறுநில தமிழ் மன்னர்களுடன் துட்டகைமுனு போராடி வென்ற பின்னரே எல்லாளனுடன் போரைத் தொடுத்தான் என்று அது விபரித்துள்ளது.

எல்லாளனை வென்றபின் அனுராதபுர இராச்சியத்தில் பாரிய தமிழர் படுகொலையை துட்டகைமுனு செய்வித்திருந்தான். இந்த இனக் கொலையை நினைத்து துட்டகைமுனு மனங்கு முறியதாகவும்- அவனை புத்தபிக்குகள் தேற்றி, அவன் எந்தத் தவறும் செய்யவில்லை என்று நம்பிக்கையூட்டியதாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

எல்லாளனின் வீரச்சாவைத் தொடர்ந்து ஆயிரம் வருடங்கள் ஈழத்தமிழருக்கு இருண்டயுகமாகவே கழிந்தது. 1214ம் ஆண்டு புதிய யாழ்ப்பாண அரசு மேலெழும்வரை தொடர்ச்சியான ஒரு ஆட்சிவரலாறு ஈழத்தமிழருக்கு இருக்கவில்லை. துட்டகைமுனு செய்த இனக்கொலை இதற்குப் பிரதான காரணம். எனினும் அந்த காலப்பகுதியில் தென்னிந்திய தமிழ் சாம்ராச்சியங்கள் நேரடியாகவோ - மறைமுகமாகவோ ஆட்சி செலுத்தியுள்ளன.

இந்தக் காலத்திலிருந்து இலங்கைத்தீவு இரண்டு இன - மொழி அரசுகளாக திட்டவட்டமாக பிரிந்து கிடந்தது. வடக்கு கிழக்கில் தமிழர்களது அரசும் - தெற்கிலும் மேற்கிலும் சிங்களவர்களது அரசும் இருந்தன. இந்த இரண்டு அரசுகளுக்கு நடுவே இருந்த உட்புக முடியாத அடர்ந்தகாடு இரண்டு அரசுகளையும் பிரித்து வைத்திருந்தது. இந்த இரண்டு அரசுகளும் வேறுபட்ட மொழிகளைப் பேசி வித்தியாசமான மதம் மற்றும் வழக்கங்களை கைக்கொண்டு பிறிம்பான அரசியல் ஆட்சிகளை நடாத்தி வந்தன. இது ஐரோப்பியரின் வருகைவரை தொடர்ந்தது. ○

( 07ஆம் பக்கத் தொடர்ச்சி )

## தலைவர் ......

பெறும் பேச்சுவார்த்தையே பயனுடையதாக விளங்கும்.

பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனைகளை விதிக்க சந்திரிகா அரசு விரும்புகின்றது. அரசுகள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு பேச்சுவார்த்தைகளை நடாத்த புலிகள் இயக்கம் மட்டுமல்ல உலகின் எந்த ஒரு விடுதலை இயக்கமும் உடன்படமாட்டாது.

அரசின் நிபந்தனையை ஏற்று நடைபெறும் பேச்சுவார்த்தை என்பது தமிழீழத்தின் அடிமை சாசனத்தை எழுதுவிக்க நடைபெறும் நாடகமாய் கருதமுடியும். தமிழ் மக்கள் விரும்புவதையல்லாது தான் விரும்புவதை தமிழ் மக்கள் மீது திணிக்கும் திட்டத்துடனேயே சந்திரிகா அரசு, நிபந்தனைகளை விதிக்கின்றது. எனவே சிங்கள அரசின் முன் நிபந்தனைகள் எதையும் ஏற்றுக்கொள்ள புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

இதேசமயம், புலிகள் இயக்கமும் அமைதிப் பேச்சிற்கு முன்நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. ஆனால் பேச்சுவார்த்தை சுமுகமான சூழலில் நடைபெறுவதற்கேற்ற உகந்த புறநிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அது சிங்கள அரசைக் கோருகின்றது. ஆக்கிரமிப்புப் படையாக சிங்கள இராணுவம், தமிழர் ஊர்களில் நிலைகொண்டிருக்கும் ஒரு பதட்டமான சூழலில் பேச்சுவார்த்தை பயனுள்ள முறையில் நடைபெற வாய்ப்பில்லை. ஆகவே, ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் இருந்து சிங்களப்படையினர் விலக்கிக் கொள்ளப்படவேண்டிய தேவையை புலிகள் இயக்கம் வலியுறுத்துகிறது. அத்துடன், தமிழ் மக்களின் சகஜவாழ்விற்கு குறுக்கேயுள்ள பொருளாதாரத்தடைகள் - போக்குவரத்து முட்டுக்கட்டைகள் அகற்றப்பட்டு ஒரு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று புலிகள் இயக்கம் கோருகின்றது. அப்போதுதான் இருபகுதியினருக்கும் இடையேயான அரசியல் பேச்சுவார்த்தை உயர்வு - தாழ்வு அற்ற சமத்துவமான சூழலில் நடைபெற முடியும். இவ்வாறு நடைபெறும் பேச்சுவார்த்தையே உண்மையானதாக - நிரந்தரத் தீர்வை நோக்கி நகரும் இலட்சியத்தைக் கொண்டதாக இருக்கமுடியும்.

''சிங்களப் பேரினவாதத்தின் கடும்போக்கிலும்- தமிழர் விரோதக்கொள்கையிலும் அடிப்படையான மாற்றங்கள் எதுவும் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. எதிர்காலத்தில் இந்த மாற்றம் நிகழாதுபோனால் தமிழீழத்தனியரசு உருவாகும் புறநிலையை உருவாக்கித்தந்த வரலாற்றுப்பெருமை சிங்களப்பேரினவாதத்திற்கே சாருமென்பதை நான் இடமாகக் கூறுவேன்.'' என்று தலைவர் பிரபாகரன் எதிர்வு கூறுகின்றார்.

ஈழத்தமிழர்களை வந்தேறுகுடிகள் என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அண்மையில் கூறியிருந்தார். இக் கூற்றுத்தொடர்பாக கண்டனங்கள் எழுந்திருந்தபோதும் இன்றுவரை, அம்மையார் தனது கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இந்த இனவாத மனநிலையுடனேயே இன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் உள்ளனர். இந்த பேரினவாத நிலைப்பாட்டுடன் உள்ள ஆட்சியாளர்கள் தமிழர் இனப்பிரச்சனையின் அடிப்படைகளை ஏற்று - தீர்வுகாணும் ஆற்றலுடன் இருக்கின்றனர் என்று கருதமுடியாது. இந்த நிலையில் தலைவர் பிரபாகரனின் சமாதான அழைப்பை ஏற்று புலிகள் இயக்கத்துடன் அரசியல் பேச்சுக்களில் ஈடுபடுவதா! அல்லது போரைத்தொடர்வதா! என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு சந்திரிகா அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது.



www.eelamview.com

**3.** 12.98 அன்று ஒட்டுசுட்டானை படையினர் ஆக்கிரமித்தனர். நெடுங்கேணிப்பகுதியில் இருந்து இரகசியமாக நகர்ந்த படையினர் ஒட்டுசுட்டானை கைப்பற்றியபோது நூற்றுக்கும் அதிகமான மக்கள் படையினரிடம் சிக்கினர். பன்னிரண்டாயிரம் மக்கள் ஏதிலிகளாகினர்.

- சண்டைகள் ஏதும் இல்லாது படையினர் ஒட்டுசுட்டானை ஆக்கிரமிக்க என்ன காரணம்?
- ஜயசிக்குறுய் சமர்முனையிலும் கிளிநொச்சி சமர்முனையிலும் பாரியசாதனைகளை புலிவீரர்கள் படைத்துக்கொண்டிருக்கும்போது இந்தப் படைநகர்வு எப்படி நடந்தது?
மக்கள் விடைதேடும் கேள்விகள் இவை.

வன்னிப்போர்க்களத்தின் இராணுவ யதார்த்தம் எவ்வாறு உள்ளது! படையினரின் தந்திரங்கள் எதை அடிப்படையாகக் கொண்டுள்ளன! என்ற கேள்விகளுக்கு விடைகண்டால்- எமது மக்களின் வினாக்களுக்கும் பதில் கிடைக்கும்.

வன்னிப்போர்க்களம், இரண்டு பாரிய சமர்முனைகளைக் கொண்டுள்ளது. ஒன்று, கிளிநொச்சி சமர்முனை. இரண்டு, ஜயசிக்குறுய் சமர்முனை.

கிளிநொச்சி சமர்முனை கடந்த இரண்டரை ஆண்டுகளாக உள்ளது. ஓயாத அலைகள் - 2 காரணமாக சமர்முனையின் அளவு சுருங்கியிருந்தாலும் இன்றும் அது ஒரு பிரதான சமரரங்காகவே உள்ளது. பரந்தன் - ஆனையிறவு சமர்முனை என இன்று அழைக்கப்படும் இந்த சண்டை அரங்கைச் சுற்றி 20 கி.

தப்பட்டதும் புலிகளின் வெற்றியை கோடிகாட்டப் போதுமானவை.

நகரமுனையும் படைக்குமுன்னே மலைபோல எதிர்ப்பைக் காட்டியவாறு புலிகள் போரிடும்போது படையினரால் நகரமுடியாது போகின்றது. அந்த நிலையில், முன்னே நகர்வதற்குப் பதிலாக - படையினர் பக்கவாட்டாக, புதிய சமர்முனைகளைத் திறந்து - நிலம் பிடிக்க முனைகின்றனர். புளிடாகுள சண்டைகள் படையினருக்கு பாதகமாக மாறியபோது புதிய முனைதிறந்து கரிப்பட்ட முறிப்பை கைப்பற்றியதை நினைவுகூரலாம்.

இதுபோல ஜயசிக்குறுய் சமர்முனை கடுமையாகிச்செல்ல அதை நிறுத்திவிட்டு 'றிவிபல' என்ற பெயரில் படைத்தலைமை புதிய சமர்முனையை ஒட்டுசுட்டானில் திறந்தது. படையினர் பயன்படுத்தும் இந்தத்தந்திரம் அனைவரும் அறிந்ததே. புலிகளிடம் போதிய ஆட்பலம் இருந்தால் படைத்தலைமையின் இந்த நகர்வுத்தந்திரம் எடுபடாது போகும். புலிகள் இயக்கத்திடம் உள்ள ஒரே ஒரு இல்லாமையான ஆட்பற்றாக்குறையை படைத்தரப்பு அடிக்கடி பயன்படுத்திவருகின்றது.

ஒட்டுசுட்டானிலும் இதுதான் நடந்தது. வன்னிப் போர்க்களத்தின் மூன்றாவது சமரரங்கம் ஒட்டுசுட்டான். காடுசார்ந்த நீண்ட நிலப்பரப்பினூடாக ; படையினர் புதியதொரு சமர்முனையைத் திறந்து - ஒட்டுசுட்டானை நோக்கி இரவில் - இரகசியமாக நகர்ந்தபோது அதைத் தடுக்கமுடியாமல் போய்விட்டது.

தமது படைநிலைகளில் இருந்து அவர்கள் செய்யும் இரகசியநகர்வை



செயற்பட்டு வருகின்றது. புலிகள் இயக்கத்தின் ஆட்பலத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் கணிசமான இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்துள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், புதிது புதிதாக எதிரிப்படை களங்களைத் திறக்க முனையும்போது அவற்றை முறியடிக்கத் தேவையான ஆட்தொகை இன்னமும் வந்து சேரவில்லை.

படையினர் புதிய இடங்களை ஆக்கிரமிக்கும் போது அவர்களுக்கு பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்

தொகை அதிகரிப்பு பிரதான காரணம்.

தமது தோல்விகளை சரிசெய்யும் நோக்குடன் படையினர் புதிய களங்களைத் திறக்கும் போது - அந்தச் சமர் முனையை படையினரின் புதைகுழியாக நாங்கள் மாற்றும்போதுதான் சிங்களத்தின் ஆக்கிரமிப்பு ஆசைக்கு முடிவுஏற்படும்.

இருவேறு முனைகளில் சமர்களை நடாத்திகொண்டே மூன்றாவது முனையை திறக்கத்தேவையான மேலதிக படையை அரசபடைகள் ஒதுக்கி வைத்திருப்பது

# ஒட்டுசுட்டான் படைநகர்வு — வன்னியின் புதியசமர்முனை

மீற்றர்கள் நீளமான முன்னரங்க நிலைகளை புலிகள் அமைத்து காவல்புரிகின்றனர்.

ஜயசிக்குறுய் கடந்த ஒன்றரை வருடங்களாக நடந்துவருகின்றது. சமருக்கெல்லாம் தாய்ச்சமர் என தலைவர் பிரபாகரன் வர்ணித்த இந்த மாபெரும் சமர் நிறுத்தப்பட்டுவிட்டது என்று அரசு அறிவித்துவிட்டது. ஆயினும், படையினர் ஆக்கிரமித்த நிலத்தை பாதுகாத்தபடி இப்போதும் அங்கேயே நிலைகொண்டுள்ளனர் இந்த சமர்முனை சுமார் 40 கி.மீ. நீள முன்னரங்க காவலரண்களைக் கொண்டது.

இந்த இரண்டு சமர்முனைகளிலும் ஆயிரக்கணக்கான புலிவீரர்கள் நிரந்தரமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இரவும் - பகலும் சண்டைகளில் ஈடுபடுகின்றனர். கண்விழித்து - காவல்காத்து படை நகர்வை தடுக்கின்றனர்.

இந்த இரண்டு சமர்முனைகளிலும் புலிவீரர்கள் அற்புதமாக சண்டையிட்டு வருகின்றனர். இரண்டு சமர் அரங்கிலும் சிங்களப் படைகள் தோல்விகளையே தழுவிவருகின்றன. ஒரு முனை வெட்டிச்சுருக்கப்பட்டதும் - மறுமுனையின் இராணுவநடவடிக்கை நிறுத்

தடுக்கவேண்டுமாயின், படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு முன்னால் இடைவெளி இல்லாத வகையில் - நெருக்கமாக முன்னரங்க நிலைகளை அமைத்து, புலிவீரர்கள் இரவும் - பகலும் காவல் செய்யவேண்டும். இதற்கு பெருமளவு ஆளணி தேவை. இந்த இராணுவ யதார்த்தத்தை எமது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

மரபுப் போர்முறையில் சண்டைகள் நடைபெறும் ஒரு பெருங்களமாக வன்னிச் சமர் அரங்கங்கள் உள்ளன. சிங்களப் படைகளுக்கும் புலிப்படைக்கும் இடையேயான போரின் ஒரு வளர்ச்சிப் பரிமாணத்தை இது காட்டுகின்றது.

மரபுச் சண்டைகளுக்கு திட்டமிடல் - தந்திரம்- வளம் என்பவற்றிற்கு அப்பால் இரண்டு முக்கிய இராணுவ அம்சங்கள் அடிப்படையாக உள்ளன. ஒன்று, மரபுப் போர் ஆயுத - தளபாடங்கள். இரண்டாவது, பெருந்தொகை ஆட்பலம்.

முதலாவது விடயத்தில், ஒப்பீட்டளவில், புலிகள் தன்னிறைவுடனேயே உள்ளனர். ஆனால், இரண்டாவது விடயத்தில் தன்னிறைவு பெற, புலிகள் இயக்கம் பெரும் முயற்சிகளை எடுத்து - விடாது

தமது தோல்விகளை சரிசெய்யும் நோக்குடன் படையினர் புதிய களங்களைத் திறக்கும் போது - அந்தச் சமர்முனையைப் படையினரின் புதைகுழியாக நாங்கள் மாற்றும்போதுதான் சிங்களத்தின ஆக்கிரமிப்பு ஆசைக்கு முடிவு ஏற்படும்.

தாது விடுவோமானால் அவர்களது ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடரவே செய்யும்.

'ஜயசிக்குறுய்' இதற்கு நல்ல உதாரணம். ஜயசிக்குறுயிக்கு எதிரான எதிர்ச்சமரில் படையினர் சந்தித்த பாரிய இழப்புகள் அந்த இராணுவ நடவடிக்கையை இடைநடுவில் நிறுத்திவிட்டன. ஜயசிக்குறுயை முடக்கிவைத்த இராணுவக் காரணிகளில் புலிப்படையின் ஆட்பல உயர்வும் ஒரு பிரதான காரணி. ஓயாத அலைகள் - 2 மூலம் கிளிநொச்சி மீட்டெடுக்கப்பட்டதற்கும் புலிகளின் ஆட்

போல, நாமும் திறக்கப்படும் புதிய முனைகளில் எதிர்ச்சமர் செய்யத் தேவையான ஆட்பலத்தை மேலதிகமாக வைத்திருக்க வேண்டும். இதற்கு புலிகளின் ஆட்தொகை அதிகரிக்கப்படவேண்டும்.

எமது இளைஞர்களும் இளம் பெண்களும் என்ன செய்வதாக உத்தேசம்!

படையினர் நிலங்களை ஆக்கிரமிக்க - ஆக்கிரமிக்க ஏதிலிகளாக எழுந்தோடப் போகின்றார்களா, அல்லது புலிகளுடன் இணைந்து ஆயுதமேந்திப் போராடி - ஆக்கிரமிப்பு இராணுவத்தை விரட்டியடித்து - விடுதலையைக் காணப் போகின்றார்களா!

என்ன செய்வதாக உத்தேசம்...



www.eelamview.com



பாம்பிற்கான கோயில்களும் - வழிபாடுகளும் உள்ளன. இதே போன்று, இயக்கர்கள் பூதங்களை வழிபடுபவர்களாக இருந்தனர். பூதங்கள் அழிப்புச் சக்திகள் என்றும் - அவற்றை வழிபட்டு காணிக்கைகள் கொடுத்து அவற்றைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று நம்பி வாழ்ந்தனர்.

தமிழர்களான இயக்கர்கள் எப்படி இருந்தனர் என்றும் பொட்டலமி வர்ணிக்கின்றார்.

" காதுகளில் அணியப்பட்டுள்ள பெரிய ஆபரணங்களால் ஆண்களினதும் - பெண்களினதும் காதுகள் பெரிதாக இருந்தன. "

இந்த கடுக்கன் ( காதுத்தோடு ) அணியும் வழக்கத்தை இன்றும் எமது சில கிராமங்களிலுள்ள வயோதிபர்களிடம் காணலாம். ஆபரணம் வாங்க வசதியற்றோர் பனைஓலையில் செய்யப்பட்ட அணிகலங்களை அணிந்திருந்தனர்.

சிங்களவரின் வரலாறு புதிர் நிறைந்ததாகவே உள்ளது. இவர்களது வரலாற்றைக் கூறும் சம்பவங்கள் கற்பனையான - ஐதீகக் கதைகளாகவே உள்ளன.

விஜயனின் வருகையும் அவ்வாறான தொன்றே என வரலாற்றாய்வாளர்கள் முடிவு கூறியுள்ளனர்.

கௌதம புத்தரும் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறியுள்ளது. இந்தியாவில் அல்லது புத்த மதம் பரவியுள்ள எந்த ஒரு நாட்டிலும், புத்தபிரான் இலங்கைத் தீவுக்கு சென்றுவந்ததாக எழுதப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக்கு புத்தபிரான் ஏன் வந்தார்? என மகாவம்சம் விளக்கம் கூறுகின்றது.

முதற்தடவை, புத்தபிரான் தெற்கிலுள்ள மகியங்கனைக்கு வந்திருந்தார். அங்கேவந்து இயக்கர்களுக்கு முடிவு கட்டினதாக சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக, வடக்கிலுள்ள நாகதீபவுக்கு புத்தபிரான் வந்திருந்தார், அங்கே வந்து நாகர்களுக்கு முடிவு கட்டினதாக சொல்லப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, புத்தபிரான் களனிக்கு சென்றதாக சொல்லப்பட்டுள்ளது. (களனியிலும் நாக இராச்சியம் இருந்தது குறிப்பிடத்தக்கது) களனியிலிருந்து அனுராதபுரம் உட்பட சில இடங்களுக்கு அவர் சென்றிருந்தாராம்.

புத்தபிரானின் விஜயம் பற்றிய மகாவம்சத்தின் கூற்று வெறும் கற்பனை என பிரபல சிங்கள தொல்பொருள் ஆய்வாள

# யார் "வந்தேறுகுடிகள்"

'சீலோன்' என்று முன்னர் அழைக்கப்பட்ட தீவின் தற்போதையபெயர் 'சிறிலங்கா.' இந்தப் புதியபெயர் - 1972ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு அரசியல் யாப்பின் பிரகாரம் - சூட்டப்பட்டிருந்தது.

போர்த்துக்கேய வர்த்தகர்கள் 16ம் நூற்றாண்டில் தீவில் காலடி எடுத்துவைத்தபின்னர் வெளியுலகிற்கு இந்தத்தீவு 'சிலோன்' என்ற பெயரிலேயே தெரிந்திருந்தது.

இந்தத்தீவின் சுதேசிகளான தமிழர்களும் - சிங்களவர்களும் தீவை- பல்வேறு பெயர்கொண்டு அழைத்தனர்.

தீவின் பழங்குடிகளான தமிழர்கள் தாமிரபரணி என அழைத்தனர். கி. மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகச்சக்கரவர்த்தியின் பாறைக் கல்வெட்டொன்றில் இந்தத்தீவு தாமிரபரணி என்ற தமிழ்ப்பெயர்கொண்டே அழைக்கப்பட்டுள்ளது.

மகா அலெக்சாண்டரின் காலத்தில் கிரேக்க கடற்பயணிகள் தாமிரபரணி என்பதை 'தப்ரபோன்' என உச்சரித்து - அதை பெயராக்கினர்.

முன்னைய சமஸ்கிருத காப்பியங்களில் இந்தத்தீவு 'லங்கா' என (சமஸ்கிருதமொழியில்) குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் தாமிரபரணி என்ற பெயர் பாவனையில் இருந்து கைவிடப்பட்டு இலங்கை என்ற புதிய தமிழ்ப் பெயர் உபயோகத்திற்கு வந்தது.

கி.பி. முதலாம் - நான்காம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திய சங்க இலக்கியங்களில் இந்தத்தீவு இலங்கை என்றே அழைக்கப்பட்டுள்ளது.

அப்போதும்சரி - இப்போதும்சரி இந்த தீவிற்கு சிங்கள மொழியில் எந்த ஒரு பெயரும் இருந்ததில்லை.

சிறிலங்கா என்ற தற்போதைய பெயர் சமஸ்கிருதச் சொற்பதமாகும். இதன்பொருள் "அற்புதமான தீவு" என்பதாகும்.

'சீகல' என்பது தீவிற்குள்ள ஒரேஒரு சிங்களப் பெயர். இது அதிகம் பயன்படுத்தப்படவில்லை. கி. பி. 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சத்திலேயே இந்தப் பெயர் இரண்டு இடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. தீபவம்சத்தில் ஒரேஒரு இடத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இரண்டும் பாளிமொழி நூல்கள்.

பொதுவாக, உபயோகத்திலுள்ள சிங்களப் பெயராக சமஸ்கிருத சொற்பதமான 'லங்கா' என்பதே இருந்து வந்துள்ளது.

சிங்களவரின் வரலாறு விஜயனின் வரலாறுடன் தொடங்குகின்றது. விஜயனையும் அவனது தோழர்களையுமே சிங்களவரின் மூலவர்களாக மகாவம்சம் கூறுகின்றது. இவர்கள் இலங்கைத்தீவிற்கு வரும்போது இங்கே மனிதர்கள் எவரும் வசிக்கவில்லை எனக் கூறி - தீவை சிங்களவரின் உடமையாக்க மகாவம்சம் முனைந்துள்ளது. இதனால், அவர்கள் வரும்போது தீவில் இருந்த பழங்குடிகளான - தமிழர்களின் வழித்தோன்றல்களான - நாகர்களையும், இயக்கர்களையும் மனிதர்கள் அல்ல, அவர்கள் அரை மனிதர்கள் என்று மகாவம்சம் வகைப்படுத்தியுள்ளது.

நாகர்களை பாம்புகள் என்றும் இயக்கர்களை பூதங்கள் என்றும் வர்ணித்துள்ளது.

எனினும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் ( அதாவது கி.மு. 1000 - 100 ) இந்தத் தீவில் இரண்டு நாகஇராச்சியங்கள் இருந்தன என்பது வரலாற்று உண்மை.

முதலாவது இராச்சியம் வடக்கில் இருந்தது. அது நாகதீவு என்று தமிழிலும் - நாகதீப என்று சமஸ்கிருதத்திலும் அழைக்கப்பட்டது.

இரண்டாவது, தென்மேற்கில், களனியில் இருந்தது. இந்த உண்மையை பண்டைய பாளி நூல்கள்கூட வேறுவிதமாகச் சொல்லியுள்ளன. சமஸ்கிருத காப்பியங்களும் இதைப் பதிந்துள்ளன.

கி.மு 6ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட இராமாயணம் - மகாபாரதம் போன்ற சமஸ்கிருத காவியங்கள் இந்த நாக இராச்சியங்கள் பற்றியும், இந்த இராச்சியங்களை வெற்றி கொண்ட இயக்க மன்னனான இராவணன் பற்றியும் குறிப்பிடுகின்றன.

கிரேக்கப் புவியியலாளரும் - வானசாஸ்திரியுமான கி . பி. 2 ம் நூற்றாண்டைச் சேர்ந்த பொட்டலமி என்பவர் வடக்கில் இருந்த நாகஇராச்சியத்தை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிலுள்ள புத்தளத்திலிருந்து - அனுராதபுரம் ஊடாக கிழக்கிலுள்ள திருகோணமலையை அண்டிய பகுதிவரை அந்த நாகதீவு இராச்சியம் நிலைகொண்டிருந்ததாக எழுதியுள்ளார்.

நாகர்கள் நாகபாம்பு வழிபாட்டைக் கடைப்பிடித்திருந்தனர். இன்றும் கூட வடக்கில் நாகரான பரண விதான - 1960 களில் - பகிரங்கமாகக் கூறி, பிக்குகளினதும் - பேரினவாதிகளினதும் கண்டனங்களைச் சந்தித்திருந்தார்.

எல்லாளன் - துட்டகைமுனு போரில் தமிழர்களை ஜென்மப் பகைவர்களாகவும் —

விஜயன்- புத்தபிரான் வருகை கதைகளுடன் தமிழரின் வழித்தோன்றல்களான இயக்கர், நாகர்களை ஜென்மப் பகைவர்களாகவும் மகாவம்சம் சித்தரித்துள்ளது.

இலங்கையின் புராதன தலைநகரான அனுராதபுரத்தை தமிழ்மன்னர்களே தோற்றுவித்திருந்தனர். பௌத்தம் இலங்கையில் பரவிய காலத்தில் தமிழ் ஆட்சியாளர்கள் அனுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஆண்டுவந்தனர்.

பௌத்தமதத்தை இலங்கைக்குப் பரப்பிய அசோகச்சக்கரவர்த்தியின் மகன் என்று கூறப்படும் மகிந்தன் இலங்கைக்கு வந்தபோது அனுராதபுரத்தை ஆண்ட தேவநம்பியதீசன் என்பவன் தமிழ் - இந்து மன்னனாகும்.

தேவநம்பியதீசனை ஒரு சிங்கள மன்னன் என்றே சிங்களவர் கூறுகின்றனர். இது தவறு. ஏனெனில் பௌத்தத்தின் வருகைக்குப்பின்பே சிங்கள இனம் உருவாகத் தொடங்கியது.

இந்த தமிழ் மன்னனைத் தொடர்ந்து சேனன் மற்றும் குத்திகன் (கி. மு. 177-155 ) என்ற ஆட்சியாளர்களும் அவர்களைத் தொடர்ந்து எல்லாளனும் (கி.மு. 145 - 101 ) அனுராதபுரியை தலைநகராகக் கொண்டு ஆண்டனர்.

எல்லாள மன்னனை துட்டகைமுனு வெற்றி கொண்ட பின்னரே அனுராதபுரம், சிங்களமன்னர் பரம்பரையின் கட்டிலாக மாறியது.

சிங்களவரின் இராசதானியாக மாறமுன்னர் அனுராதபுரத்தையும் அதன் சுற்றாடலையும் தமிழ் ஆட்சியாளர்களே ஆண்டுவந்தனர் என்பதை மகாவம்சத்தின் 24வது அத்தியாயம் ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழ் மன்னர்களுடன் தான் போர் தொடுக்கப் போவதாக தனது தந்தையாரிடம்

(02ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

# மனவெளி அரங்கம் "அணிகள் வேய் பிணைங்கள்"

### காட்சி 1

இது செப்டம்பர் 1964 ம் ஆண்டு. அப்போது பதவியிலிருந்த சிறீமாவின் அரசாங்கம் பெரும்பான்மை இழந்ததால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் 1965 மார்ச்சில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த வேளை. மலேசிய செல்வந்தர் முன்னர் இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக பதவி வகித்தவர் - இராணி அப்புக்காத்தர் ஆகிய முருகேசு திருச்செல்வத்தின் கொழும்பு இல்லம் மிகப் பரபரப்பாக இயங்கியது. ஏனெனில் இங்குதான் இன்னொரு ஏமாற்றுப் படலத்திற்கான முன்னுரை எழுதப்படலாயிற்று. தமிழர் ஆதரவை டட்லிக்கு அள்ளிக்கொடுத்து, அவர் அரசாங்கம் அமைக்க ஆதரவுவழங்கு வதற்கான டட்லி - செல்வா பேச்சுக்களுக்கு '' கௌரவ தரகராக '' திருச்செல்வம் இயங்கினார். தொடர்ந்து ஏமாற்றப்பட்டதாலும் உடல் நோயாலும் சோர்வுற்றிருந்த தந்தை. இன்னொரு அரசியல் விபத்துக்குள் சிக்க வைக்கப்பட்டார். தமிழர் வரலாற்றிலேயே மிகக் குறைந்த சலுகைகளை வழங்கும் இரகசிய உடன்பாட்டிற்கு தந்தை சம்மதித்த போதும் இன்னொரு விபத்திலிருந்து தன்னை தவிர்த்துக் கொண்டார். தனக்கு டட்லி வழங்கிய அமைச்சர் பதவியை அவர் ஏற்கவில்லை. தரகுக் கூலியாக திருச்செல்வமே உள்ளூராட்சி அமைச்சராக மகிழ்வோடு பதவியேற்றார்.

இப்போது, தமிழர் சிலர் தரப்பிலே பெருமிதம், சிலாகிப்பு, மிதப்பு ஏனெனில் 'மூளைத்திறன்' மிக்க தமிழன் அமைச்சராகி விட்டாரல்லவா? அத்தோடு இன்னொரு பெருமை, 1967 ம் ஆண்டு நடைபெற்ற ஐ. நாவின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சென்ற இலங்கைக் குழுவிற்கு தலைவராக அற்புதமாக ஆங்கிலம் பேசவல்ல நுட்ப மூளைத்திறன் கொண்ட ஜீ ஜீ. அல்லவா அனுப்பப்பட்டார். இதைவிட வேறென்ன பெருமை வேண்டும்? ஆனால் இவையெல்லாம் அதிக காலம் நீடிக்க சிங்களவர் விடவில்லை. வரலாற்றின் முன்னைய கசப்பான பாடங்கள் மீண்டும் தமிழன் மனவெளி அரங்கிலே அரங்கேறின. டட்லி -செல்வா உடன்பாடு காற்றிலே கலந்த கனவாக - திருச்செல்வத்திற்கு துணை அமைச்சராகவிருந்த பிரேமதாசாவே உண்மையான அமைச்சராக செயற்பட - திருக்கோணேசுவரப் பகுதியை புனிதத் தலமாக பிரகடனப்படுத்த முற்பட்ட வேளை டட்லி காலை வாரிவிட - வேறு வழியின்றி அமைச்சர் திருச்செல்வம் வெறும் திருச்செல்வமாக ...ற தமிழரசுக் கட்சியும் ஆதரவை விலக்கியது.

இவை நடந்தது 1969 ம் ஆண்டில். இதனால் டட்லிக்கு ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை. ஏனெனில் தேர்தல் நடத்த வேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. எனவே இதனையொரு அரசியல் தந்திரோபாயமாக தமிழரசுக் கட்சி அன்று நினைத்திருக்கக் கூடும். ஆனால் இங்குள்ள அவலம் என்னவென்றால் தமிழரசுக் கட்சியும் முருகேசு திருச்செல்வமும் இவ்வாறு தப்புத்தாளம் போடுகையில் சிங்களத்தாரின் பிதாமகன், அவர்களது 'மெயின் காம்ப்பை' எழுதிய அனாகரிக தருமபாலர் மீண்டும் உயிர்ப்பிக்க வைக்கப்பட்டார், சிங்களவர் மனவுலகிலே அவர் கதாநாயகனாக்கப்பட்டார். '' இந்த நாடு சிங்களமக்களுக்குரியது அல்ல சிங்கள பௌத்த மக்களுக்கே உரியது'' என்கிற அவரின் அதிசயமான ...த்தை ''புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்க இலங்கையின் இனிமையான, பெருந்தன்மையான, ஆரிய புத்திரர்களின் நிலங்களை, தேவாலயங்களை, ஏன் அவர்களையே அழிக்குமளவிற்கு சென்ற தமிழர்களிடமிருந்து சிங்களவரை பாதுகாக்க வேண்டும் '' என்கிற தத்துவத்தை சிங்களவர் மீண்டும் அசைபோட வைக்கப்பட்டு, இந்த ஆரிய மாயை அரசோச்சுவோரின் வேதமாகியது. ஆனால் எம்மவரோ இவை பற்றிகளைக் கெடுக்காமல் தத்தம் '' மூளைத்திறன் அபிவிருத்தி '' பற்றியே சிந்தித்திருந்தனர்.

### காட்சி 2

30 ஆண்டுகள் கழிந்து விட்டன. 1994 ம் ஆண்டின் நடுக்கூறு. இப்போது இன்னொரு திருச்செல்வத்தின் கொழும்பு இல்லம் பெரும் பரபரப்புக்குள்ளாகிக் கொண்டிருந்தது. கலாநிதி நீலன் திருச்செல்வம் உலக அரசியல் யாப்புக்களைக் கரைத்துக் குடித்தவர் - உலகப் புகழ் பெற்ற சட்ட நிபுணர் - மனித உரிமைகள் பற்றி முழு உலகிற்குமே விரிவுரையாற்றுபவர் - பல்வேறு ஆய்வு நிறுவனங்களின் ஆய்வாளர். இவற்றோடு இன்னொரு ஆய்வு வேலையையும் அவர் செய்யத் தொடங்கினார். சந்திரிகாவுக்கு தமிழ்ச்சாயம் பூசத் தொடங்கினார். அம்மையாரின் தனி ஆலோசகரானார். வழமையான தமிழ் தலைமைகட்கு வழியில்லாது செய்து விட்ட புலிகளை



கையாள்வது எப்படியென்கிற ஆய்வை சந்திரிகாவிடம் சமர்ப்பித்து இரண்டாவது கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தந்தையின் பாதையிலே கௌரவதரகராகி, தமிழர் விடுதலைக் கூட்டணியை சந்திரிகாவின் கூட்டணிக்கு கூட்டிச் சேர்த்தார். இன்னொரு ஒக்ஸ்போட் பல்கலைக்கழக கலாநிதியும் 25 வருடமாக கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியராக பின் துணை வேந்தராக இருந்த பீரிசை துணை கொண்டு தமிழரின் கழுத்திற்கு சுருக்குப் போட அரசியற் பொதியெனும் பாசக்கயிற்றையும் தயாரித்தார்.

- வே. பாலகுமாரன் -

இவையெல்லாவற்றையும் விட இன்னொரு காரியமும் செய்தார். தனக்கு வழங்கப்படக்கூடிய அமைச்சர் பதவியை தன் தந்தை போலல்லாது தனக்கேற்றவாறு இன்னொருவருக்கு தாரை வார்த்தார். இவ்வாறாக இன்னொரு தமிழ் மூளை அரசியல் உலகிற்கு அறிமுகமானது.

எப்படிப்பட்ட அறிவாளர் இந்தப் புதுமுகம் லக்ஷ்மன் கதிர்காமர்? அவரின் பட்டங்களின், பதவிகளின் பட்டியலைப் பாருங்கள். சனாதிபதிச் சட்டத்தரணி, தொழிற்பிணக்குகள், சர்வதேச சட்டங்கள், Intellectual Property Rights எனப்படும் அறிவாளர் புலமையுரிமை போன்றவற்றில் இலங்கையின் தலைசிறந்த சட்டவாளர், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர், ஒக்ஸ்போட் சங்கத்தலைவராக இருந்தவர், பிரிவிகவுன்சில் எனப்படும் கோப் பெருமன்றில் பொதுநலவாய நாடுகள் சார்பில் வழக்குரைக்கும் தகுதி பெற்ற ஒரே இலங்கையர், ஐ. நாவின் சர்வதேச தொழில் தாபனத்தின் ஆலோசகராகவிருந்தவர், W. I. P.O எனப்படும் சர்வதேச அறிவாளர் புலமையுரிமை அமைப்பின் பணிப்பாளராகவிருந்தவர், ஆசிய பசுபிக் நாடுகளின் அரசாங்கங்களுக்கு இவ்விடயத்தில் ஆலோசகர். இவ்வாறாக இப்பட்டியல் மேலும் நீளும். இவற்றோடு அவரது ஒக்ஸ்போட் தரத்திலான ஆழமான ஆங்கில புலமை மேட்டுக்குடிப் பாங்கிலான இலாவகமான பழக்க வழக்கங்கள். பேச்சுவன்மை - இதுவரை எந்தவொரு தமிழனும் கொண்டிராத தகுதிகளோடு சந்திரிகா அமைச்சரவையில் சேர்ந்த கதிர்காமர் இதுவரை என்ன செய்தார்? தனது முழு அறிவையும் எதற்காக பயன்படுத்தினார்? எதனைச் சாதித்தார்?

இப்படிப்பட்ட புலமையுடைய கதிர்காமர் அடக்குமுறையாளருக்கு எதிராக குருதி சிந்தி குற்றுயிரும் குலையுயிருமாக போராடும் தனது மக்களுக்கு எதிராக தனது அறிவை அடகுவைத்து இழிவான இராசதந்திர பரப்புரையை வெகு இலாவகமாக மேற்கொண்டார். சிங்களவரே திகைத்துப்போனவர்கள். தம்மில் எவரால் கூட இவ்வாறு விடுதலைப் போராட்டமொன்றை விழலுக்கு இறைத்த நீராக வருணிக்க முடியாது என்றுரைத்தார்கள். பொன். இராமநாதனுக்குப் பின் கதிர்காமர் என தலையில் வைத்துக் கூத்தாடினார்கள். சென்ற இடமெல்லாம் - இந்தியா தொட்டு மேற்கு ஐரோப்பிய நாடுகள், கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா எங்கும் வெற்றிக்கொடி நாட்டி - புலிக்கொடி இறக்கப்படும் நாள் விரைவில் என குளுரைத்தார். கதிர்காமரில் சிங்கள அமைச்சர்களுக்கு இலேசாக பொறாமை கூட ஏற்பட்டதாம். நீலன் பின்னிற்க, கதிர்காமர் முன்னிற்க, பீரிஸ் பக்கம் செல்ல, சந்திரிகா வெற்றிக்கம்பம் நோக்கிச்செல்லும் வீராங்கனையானார். எதற்கும் கதிர்காமர் பற்றியே பேச்சு. இந்தியா புலிகளுக்கு தடை. அமெரிக்கா பயங்கரவாதிப் பட்டம். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிதிசேகரிப்பு வறட்சி, இங்கிலாந்தில் விரைவில் தடை, எங்கும் கதவடைப்பு என வீரப்பிரதாபங்கள் - உலக புலியொழிப்பு நாயகனாக பவனி வந்தார் கதிர்காமர். செருக்கு தலைக்கேறியது. பேச்சில் ஆணவம் தொனித்தது.

### காட்சி 3

1998ம் ஆண்டின் இறுதிக்கூறு. உலகத்திலிருந்த பயங்கரவாதிகளை அழிப்பதற்கே அவதாரம் எடுத்தாற்போல பொங்கியெழுந்த கதிர்காமருக்கு இப்போது என்ன நடந்தது? உள்நாட்டில் ரத்வத்தவும், வெளிநாட்டில் கதிர்காமரும் - புலிகள் தொலைந்தார்கள் என்றவர்கள் தம் கண் முன்னே இருவரும் தலைகுப்புற கவிழ்வதை திகைப்போடு பார்த்து நிற்கின்றார்கள். தான் ஒரு மிகக் கேவலமான - கோல்மூட்டும் ஒரு பகடையாக பயன்பட்டதை கதிர்காமர் உணரும் காலம் நெருங்கிவிட்டது. இதுவரை கதிர்காமர் அடித்த தம்பட்டங்களின் விளைவாக சர்வதேசத்தில் புலிகளின் செயற்பாடுகள், நிதி சேகரிப்புக்கள், இராணுவ வலிமை, எவ்வளவு தூரம் குறைக்கப்பட்டது? நாடாளுமன்றிலே கதிர்காமருக்கு சவால் விடப்படுகின்றது. ''விண்ணாணப் பேசி வார்த்தைகளால் மயக்காமல்'' நேரடியாக பதில் சொல் என குற்றவாக

(09ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

# தலைவர் பிரபாகரனின் மாவீரர்நாள் செய்தி சொல்கின்ற விடயங்கள் என்ன!

இந்த வருட மாவீரர் நாள் அறிக்கையில் - தலைவர் பிரபாகரன் அவர்கள்- எமது விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களை அலசி ஆராய்ந்து - கருத்துக் கூறியுள்ளார்.


அறிக்கையின் ஆரம்ப விடயமாக தாயக விடுதலைக்காக களமாடி வீரச்சாவடைந்த காவியநாயகர்களை போற்றிப் புகழ்ந்து அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி - கௌரவித்துள்ளார்.

தரைப்புலி எனவும் - கடற்புலி எனவும் - கரும்புலி எனவும், தரையிலும் - கடலிலும் - தமிழர் நாட்டெல்லைக்கு அப்பாலும் தமிழீழ இலட்சியக்கனவோடு அமரகாவியமான மாவீரர்கள் ஒவ்வொருவரையும் ஒரு சரித்திரம் என வர்ணித்துள்ளார்.

"எமது தேசத்தின் விடுதலைக்காக தம்முயிரை அர்ப்பணித்த ஒவ்வொரு சுதந்திரப் போராளிக்கும் எமது தேசத்தின் வரலாற்றில் அழியாத இடமுண்டு. இவர்கள் சாதாரணர்களாகச் சாவைத் தழுவவில்லை. எமது இனத்தின் இருப்பிற்காக தமது வாழ்வை அழித்தவர்கள். இந்த அற்புதமான துறவறத்தால் இவர்களது அடையாளங்கள் என்றுமே அழிவதில்லை. இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனி மனித சரித்திரம், ஆயிரம் - ஆயிரம் மாவீரர்களின் ஆயிரம் - ஆயிரம் தனிமனித சரித்திரங்கள் சங்கமமாகிய பெருநதியாகவே எமது தேசத்தின் வரலாறு விரிகொண்டோடுகின்றது."

என வர்ணித்துள்ளார்.

1982 இல் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் லெப். சங்கரைத் தொடர்ந்து இன்று வரையான 16 வருடகால போராட்டத்தில் 13 000 இற்கும் அதிகமான போராளிகள் காவியநாயகர்கள்



ஆகிவிட்டனர். எதிரிப்படையாட்களே வியந்து வியந்துரைத்த இவர்களது வீரச் செயற்பாடுகளும்; உலகமே ஆச்சரியப்பட்டு - புகழ்ந்துபேசிய இவர்களது உயர்ஈகங்களும் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் பிரபலப்படுத்தியிருந்தது.

விடுதலைக் கனலை மனதில் ஏந்திய வாறு போர்க்களத்தில் அவர்கள் சாதித்த வீரசாதனைகளும்-உன்னதமான போராட்டச் செயற்பாடுகளும் தமிழீழதேசியத்திற்கு உருக்கொடுத்து - பலப்படுத்திவருகின்றன.

" இன்றைய உலகம் மாறிவருகின்றது. புதிய நூற்றாண்டை நோக்கிய ஒரு புதுயுகத்தின் மானிடம் காலடி எடுத்து வைக்கின்றது. முடியப்போகும் இந்த இருபதாம் நூற்றாண்டு மனிதவரலாற்றில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தியது. போர்-புரட்சி-போராட்டம் என்று இப்பூமியில் பூகம்பமாக வெடித்த நிகழ்வுகள் சமூக உறவுகளிலும் சர்வதேச நிலைமைகளிலும் பெரும்மாற்றங்களை உண்டுபண்ணின. நெருக்கடிகள் தணிந்து மனித சமூகங்கள் சுதந்திரமாக- அமைதியுடன் வாழவும் பிறந்தது. தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்று சுதந்திரமான தனியரசுகள் தோன்றின. இனப் பிணக்குகளுக்கு தீர்வுகள் காணப்பட்டன. தீர்க்கப்படாத சிக்கல்களுக்கு தீர்வு முயற்சிகள் தொடர்கின்றன. முழுஉலகமுமே அமைதிப்பாதையில் முன்னேறிச் சென்று பிறக்கப் போகும் புதுயுகத்திற்கு தன்னைத் தயார் செய்யும் இன்றைய சூழலில் இலங்கைத்தீவில் மட்டும் மிகவும் கொந்தளிப்பான நிலைமை நிலவுகின்றது. இங்கு தமிழரின் தேசியப் பிரச்சனை இன்னும் தணியாத நெருப்பாக எரிந்துகொண்டிருக்கின்றது. இங்கு மட்டும் இன்னும் போரும் வன்முறையும் தலைவிரித்தாடுகின்றன. இலங்கையில் இந்த துயரமான அவலநிலை தொடர்வதற்குக் காரணம் என்ன?"

" ஒரு புராணத்துக் கற்பனையில் உதித்த கருத்துருவம் பூதாகாரமாக வளர்ந்து சிங்கள அரசியல் உலகை மட்டுமன்றி அறிவியல் உலகையும் ஆட்டிப் படைத்து வருகின்றது. இதனால் தமிழர் பிரச்சனையின் அடிப்படைகளையும் நியாயப்பாடுகளையும் அறிவு ரீதியாகப் புரிந்து அவற்றை மனிதாபிமானத்துடன் அணுகும் ஆற்றலையும் - பெருந்தன்மையையும் சிங்களம் இழந்துவிட்டது. "

என்கிறார் தலைவர் பிரபாகரன்.

ஒரு புராணத்தின் அடிப்படையில் சிங்களவரின் சரித்திரத்தைக் கூறும் வரலாற்றுநூலாக மகாவம்சம் என்ற புராணநூலை சிங்கள இனம் கருதுகின்றது. கி. பி. 4ம் நூற்றாண்டில் மகாநாம என்ற பௌத்தமதத்துறவியால் எழுதப்பட்ட இந்த பாளிமொழி நூல் ஒரு வரலாற்று நூல் அல்ல என்று பல உள்நாட்டு - வெளிநாட்டு வரலாற்று அறிஞர்களால் நிராகரிக்கப்பட்டபின்பும் மகாவம்சத்தை சிங்கள உலகம் விடாப்பிடியாக பிடித்துவைத்திருக்கின்றது.

இலங்கைத்தீவு சிங்களவருக்கு மட்டுமே சொந்தமான காணி என்றும்- புத்தபிரானால் அவர்களுக்கு வழங்கப்பட்ட முதிசநிலம் என்றும்-புனிதபூமி என்றும் மகாவம்சம் வர்ணித்துள்ளது. வரலாறு தொடர்பாக விஞ்ஞானத்திற்கு புறம்பான தகவல்களையும் - தமிழருக்கு எதிரான விசமக்கருத்துக்களையும் கொண்டமைக்கப்பட்ட மகாவம்சத்தை ஒரு பெரும் வரலாற்றுப் பொக்கிசமாக சிங்களவர் கருதுகின்றனர்.

இது காரணமாக ஈழத்தமிழர்களை தீவின் எதிரிகளாக - அன்னியர்களாக சிங்கள தேசம் கருதுகின்றது. இதனால், இத்தீவின் எந்த ஒரு பகுதியும் தமிழினத்திற்கு சொந்தமில்லை என்று வாதிடுகின்றது. தமிழரை வந்தேறுகுடிகள் என்று வலியுறுத்துகின்றது. தீவில் வாழ்வதாயின் சிங்கள இனத்திற்கு அடிபணிந்து வாழ் அல்லது அழிந்துபோ என்பது பேரினவாதத்தின் நிலைப்பாடு.

சிங்களஉலகின் இத்தகைய சிந்தனைகளால் தமிழரின் தேசியஇனப்பிரச்சனை தீர்க்கப்படாது இழுபட்டு - தீவிரமடைந்துவருகின்றது. எனவே தான் உலகம் எங்கும் நடைபெற்றுவரும் பிரளய அரசியல் மாற்றங்களுடன் இணைந்து - இலங்கைத்தீவிலும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் - சிங்கள இனச்சிக்கலை தீர்த்து வைக்க இயலாது சிங்களம் இருக்கின்றது.

இதனால் தீவின் இனப்பிரச்சனைக்கான சர்வரோக நிவாரணியாக போரை வரித்து - கடந்த இரண்டு தசாப்தங்களாக தமிழர்நிலத்தில் ஒரு ஆக்கிரமிப்பு போரை நடாத்திவருகின்றது.

" சிங்களப் பேரினவாதத்தின் கோரப்பிடிக்குள் சிக்கி - இத்தனை காலமாகத் தமிழினம் வடித்து வரும் இரத்தக் கண்ணீர் இன்னும் உலக சமூகத்தின் மனச்சாட்சியைத் தொடவில்லை என்பது எமக்கு ஆழ்ந்த கவலை யைத்தருகின்றது. சர்வதேச சமூகத்தின் இந்த பாராமுகப் போக்கும் சிறிலங்காவுக்கு இந்நாடுகள் வழங்கிவரும் பெருமளவிலான பொருளாதார -இராணுவ உதவிகளும் தமிழரின் பரிதாப நிலையை மேலும் மோசமடையச் செய்கின்றன ."

" உலகின் எந்தமூலையிலும் மனிதஉரிமைகள் மீறப்படும் பொழுதும், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்த பொழுதும் சிறிய தேசிய இனங்கள் நசுக்கப்படும் பொழுதும் குரலெழுப்பியும் - தலையிட்டும் மனிதநாமத்தை வேண்டும் சர்வதேச சமூகம், ஈழத்தமிழரின் பேரவலத்தைக் கண்டும் மௌனம் சாதித்து வருவது எமக்கு வேதனையைத் தருகின்றது."



www.eelamview.com

# சாதனைகளின் ஊற்றுக்கண் - மேஜர் கனீபா

சாதிக்க வேண்டும் என்பதன்றி வேறு சிந்தனைகள் அவளிடம் இருக்கவில்லை. ஓயாத அலைகள் -02 இன்போது தனக்குரிய பகுதியை நிச்சயமாகப் பிடிப்பேன். சண்டையில் இரண்டு அதிகாரிகளைப் பிடித்து போனமுறை ( 1998. 02 01 இல் ) உள்ளே வந்து வீரச்சாவடைந்தவர்களை என்ன செய்தீர்கள் என்று கேட்பேன் என்றுதான் சண்டை தொடங்கும்வரை சொல்லிக்கொண்டிருந்தாள்.

சண்டையின்போதான அவளது அணியின் நகர்வு இலகுவாக இருக்கவில்லை. ஒரு கட்டிடக் காடாக இருந்த அந்தப் பெருந்தளத்தை நெருங்குவதற்காய், ஆங்காங்கே சில மரங்களை மட்டும் கொண்ட நீண்ட வயல்வெளியை எதிரியின் கண்காணிப்பு நிலைகள், அவதானிப்புக் கோபுரங்கள் என்பவை அறியாதவாறு மிகக் கவனமாகக் கடந்து, வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலிகளை, சுருள்கம்பி வலைகளை, கண்ணிவெடிகளை அகற்றி, சூடுகளை வழங்கியவாறு மண் அணை மீதிருந்த வேலியைப் பிரித்து, அதன் பின்னிருந்த முட்கம்பி வேலிகளையும் வெட்டி, அதன் வழியாக உள்நுழைந்து வலமும் இடமும் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை — அல்ல அல்ல காவற் கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டுபோய்... சண்டை மிகவும் உக்கிரமாகவே நடந்தது. கனீபாவால் கைப்பற்றப்பட்ட காவலரண்கள் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் போகும் பிரதான வீதியுடன் அமைந்திருந்ததால்; நகரப் பகுதிக்குப் போகும் முக்கிய பாதையொன்றை எம்மிடம் இழப்பதில் ஏற்படப்போகும் இராணுவப் பின்னடைவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் இழந்த காவலரண்களை மீளக் கைப்பற்றுவதில் படையினர் கடுமையாக முனைந்தனர். கைப்பற்றிய பகுதியைத் தக்க வைக்க கனீபாவின் அணியும் உக்கிரமாகப் போராடியது. தமது தளத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே பலமான நிலைகளை அமைத்து ஆயுத, ஆள் பலத்தைக் குவித்து வைத்திருந்த படையினருக்கும், குறிப்பிட்டளவு ஆயுத தளபாடங்களுடன் உட்புகுந்த கனீபாவின் அணியினருக்குமிடையே நடந்த கடுமையான சண்டையில் கனீபாவின் அணி அதிக இழப்புகளைச் சந்தித்தது. உதவிக்கெனப் போன சிறு அணியும் இழப்புகளைச் சந்திக்க, படையினர் கடும் முயற்சியின்பின் தமது பழைய நிலைகளைப் பிடித்துக்கொள்ள, எஞ்சிய ஒரு சிலருடனும் வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள், ஆயுதங்களுடனும் கனீபா எதிரியின் காவல் வேலிக்கு உள்ளே.

கிளிநொச்சியைச் சூழ பரவலாக நடந்த சண்டையில் ஏனைய பகுதிகள் எம்மால் கைப்பற்றப்பட்டு துடைத்து அழிக்கப்பட்டுக்கொண்டிருக்க, ஒரு சிறு பொறிக்குள் கனீபா தனித்துப் போராடினாள். ஒரு பகுதியை உடைத்துக்கொண்டு எஞ்சியிருந்தவர்களுடன் தப்பி வருமாறு அறிவிக்கப்பட்டபோது வீரச்சாவடைந்தவர்களையும் அவர்களின் ஆயுதங்களையும் விட்டு வெளியேற மறுத்துவிட்டாள். காயப்பட்ட போராளிகளை வெளியேற்றியபின்னர், தன்னுடன் எஞ்சியிருந்த ஒரு சிலரையும் வெளியேறுமாறு பணித்தாள். அவர்கள் கனீபாவை தனித்துவிட்டு வெளியேற மறுக்க, அவர்களை நெருக்கியவாறு நான்கு புறமும் இராணுவம் குவியத் தொடங்க, நிலைமையைக் கூறி, இலக்குகளைக் குறிப்பிட்டு, தங்களைப் பொருட்படுத்தாது எறிகணைகளை ஏவுமாறு அறிவித்தாள். வீரம் நிறைந்த அந்தச் சண்டையில் கனீபாவை நாங்கள் இழந்தோம்.

மட்டக்களப்பிலே எமது அமைப்புக்கு ஆதரவான குடும்பமொன்றிலே பிறந்த கனீபா 1990 இன் ஆரம்பத்திலே அங்கிருந்து காடு மேடெல்லாம் கடந்து, இராணுவச் சுற்றிவளைப்புகளிலிருந்து தப்பி கால்நடையாக வன்னிக்கு வந்து 07 வது பயிற்சி முகாமிலே தன் பயிற்சியை ஆரம்பித்தபோது அவள் சின்னவள். பயிற்சி முகாமிலும் பின்னர் வேறு சந்தர்ப்பங்களிலும் தனக்கு மிகவும் விருப்பமான "காகங்களே காகங்களே காட்டுக்குப் போவீர்

## போராளியின் குருதிச்சுவடுகள்



களா" பாட்டலுக்கு அவள் ஆடும் நடனம் எல்லோருக்குமே விருப்பமானது. யார்மீதும் கோபப்படாத அவள்மீதும் யாரும் கோபப்பட்டதில்லை.

"சரியான பகிடிக்காரி, ஒரு வால் முளைக்காத குறை" என்றாள் அவளோடு நீண்ட காலம் ஒன்றாக நின்ற ஒருத்தி. ஆனையிறவுப் பகுதியில் எதிரியின் பலவேகய - 2 க்கான எதிர் நடவடிக்கையின்போது எம்மவர்களால் எதிரியின் அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. வீழ்ந்துகொண்டிருந்த விமானத்தை நோக்கி தன் துப்பாக்கியால் சுட்டு விட்டு, விமானத்தைத் தன்னுடைய அணி வீழ்த்தி விட்டதாக களத்தின் வேறொரு மூலையில் நின்ற தன்

– மலைமகள் –

தோழிகளுக்கு தொலைத்தொடர்பு சாதனம் மூலம் அறிவிக்க, எல்லோரும் நம்பியேவிட்டார்கள். பிறகுதான் உண்மை தெரிந்து தாங்கள் ஏமாந்தது புரிந்து சிரித்தார்கள். எந்தச் சண்டையின்போதுமே அவள் தனது பகிடிக் குணத்தைக் கைவிட்டதில்லை.

எட்டு வருடங்களின் முன் பலாலியைச் சூழவிருந்த காவலரண்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவற்றை மிகுந்த நம்பிக்கையோடு தலைவர் எமது படையணியிடம் தனித்துவமாகப் பொறுப்புக் கொடுத்திருந்த காலப் பகுதியில்தான், வழிமறித்துத் தாக்கும் எமது இப்போதைய வளர்ச்சிநிலையின் அத்திவாரம் பலமாக அமைக்கப்பட்டது. அந்த நேரத்தில் வழிமறிப்புச் சண்டை அனுபவம் சிறிதுமற்ற, ஆனால் மனஉறுதியில் நம்பிக்கை வைத்த நிலையில்தான் எமது படையணி அன்றைய சூழ்நிலையை எதிர்கொண்டது. ஆரம்பத்தில் மிக நெருக்கமாக அமைந்த கட்டிடங்களிடையேயும் வாழைத்தோட்டங்களிடையேயும் "விழிப்புக்" காவற் கடமையில் நின்றதும், படையினரும் இவர்களின் பக்கமாகவே அதிக தொல்லைகள் கொடுத்ததும், குறிப்பிட்ட காலத்தின்பின் நிலைமை வேறுவிதமாகி படையினர் இவர்களின் பக்கம் தலையைக் காட்டத் தயங்கியதுவுமாக ஒன்றரை வருடமாக நீடித்த அந்த வாழ்வையும், தங்கள் மேல் தலைவர் வைத்த நம்பிக்கையை இன்றுவரை தக்க வைத்துக் கொள்வதையும் கனீபா இடையிடையில் தன் பழைய தோழியருடன் இரைமீட்டுக் கொள்வாள்.

1990, 1991 இலே பலாலியைச் சூழவிருந்த காவலரண் பகுதியிலே அவ்வப்போது நடந்த சண்டைகள், ஆகாய கடல் வெளிச்சமர், பலவேகய-1, 11, கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பு, தொண்டைமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான நாற்பத்தைம்பது காவலரண்கள் அழிப்பு என்பவற்றில் பங்குகொண்டபின் இராணுவ அதிகாரியாகப் பயிற்சி அளிக்கப்பட்டு சண்டைகளுக்கான பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றினாள். இவளின் நுணுக்கமான ரசனைக்கும் கலையுணர்வுக்கும் எடுத்துக்காட்டாக அதிகாரிகள் பயிற்சியின் போதான நாடகம் ஒன்று இன்றும் நெஞ்சில் நிழலாடுவதைக் குறிப்பிடலாம்.

கலை நிகழ்வென்று கல்லூரியே களைகட்டிவிடும். பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் போட்டியாக நிகழ்ச்சி தயாரிப்பார்கள். தொடர் வகுப்புகளுக்கும் பயிற்சிகளுக்கும் இடையில் கிடைக்கும் சிறு ஓய்வின்போது அவசர அவசரமாக தயாரித்து, சில வேளைகளில் கடைசி ஒத்திகைகூடச் செய்யாமல் மேடையேறி, ஆனால் தரம் குன்றாமல் சமாளித்து அசத்திவிடுவார்கள்.

அன்றும் அப்படித்தான் நாடகம் அரங்கேறியது. சும்மா ஒருமுறை செய்து பார்த்துவிட்டு, மேடையேறும் போதுதான் அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு ஒப்பனை செய்து கொண்டனர். அவர்களின் திட்டப்படி ஒரு கள்ளுக்கடையை முதலாளி திறக்கும் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகும். கனீபாதான் முதலாளி. மேடையிலே திரை விலகியது. மேசையொன்றிலே வெள்ளைத் திரவம் நிரப்பப்பட்ட போத்தல்களைக் கண்டு நாடகக் கோஷ்டியே திகைத்துப்போனது. கனீபா உண்மையாக கள்ளையே நிரப்பினாளோ, சவர்க்காரத்தை கரைத்து நிரப்பினாளோ என்ற அச்சத்திலேயே குடிப்பதுபோல் நடிக்க வேண்டியவர்களுக்கு வயிறு பகீரென்றது. திரை விலகிய பின்னும் மேடையில் கனீபாவைக் காணவில்லை. பார்வையாளர்களுக்கு நடுவேயிருந்து கனீபாவின் சின்ன உருவம் பட்டையான திருநீற்றுப் பூச்சுடனும் மடித்த சறக் கட்டுடனும் கையில் கொழுத்தப்பட்ட சாம்பிராணிக்குச்சிகளுடன் வந்து தாவி மேடையேறியது. போத்தல்களைச் சுற்றிச் சுற்றி சாம்பிராணிப் புகை காட்டிய கனீபா மேசையின் ஓரத்தில் அவற்றைக் குத்தி நிறுத்தி விட்டு, இரண்டு கைகளாலும் நெற்றியில் குட்டித் தோப்புக்கரணமும் போட்டுவிட்டு கல்லாப்பெட்டியில் குந்தினாள். எல்லோருக்குமே சிரிப்பை அடக்கமுடியாமல் போய்விட்டது நாடகம் தொடர்ந்து நடந்தது. கள் குடிப்பவர்களாக நடிப்பவர்கள் வெள்ளைத் திரவத்தை மிக அருகில் பார்த்து, அது அந்த மாதம் முடியும்வரையில் குடிக்க வேண்டிய தேநீருக்குரிய லக்ஸ்பிறே என்பதை இனங்கண்டு வயிறெரிந்ததும், அவர்களை கனீபா ஒருவாறு சமாளித்ததும் எஞ்சியிருக்கும் ஒரு சிலரின் நினைவில் இன்றும் பசுமையாக இருக்கிறது.

மேஜர் மதனா, மேஜர் தாரணி இருவருமே கனீபாவின் சக பயிற்சி ஆசிரியர்கள். அப்போது சண்டைக்கான மாதிரிப் பயிற்சி ஒன்று நடந்துகொண்டிருந்தது. நடந்த இடம் ஒரு பெரிய இராணுவத் தளத்தின் அயல். பகலில் தொடங்கும் பயிற்சி நள்ளிரவுவரையும் தொடரும். அதன் பின்னர்தான் எல்லோரும் நீண்ட தொலைவிலுள்ள தங்குமிடத்துக்கு நடந்து வந்து சேர்ந்து, ஆயுதம் துப்பரவு செய்து, குளித்துவிட்டுப் படுப்பார்கள். அன்றிரவு பயிற்சி முடியத் தாமதமாகிவிட்டது. பயிற்சியாளர்கள் வந்துவிட்டார்கள். இவர்கள் மூவரையும் காணோம். பயிற்சி நடக்கும் வெளியொன்றிலேயே படுத்து உறங்கிவிட்டு காலையில் தங்குமிடத்துக்கு திரும்பிய மூவரையும், "கொட்டில் தேவையில்லையென்டுதானே வெட்டையில போய்ப் படுத்தனீங்கள், இனி இஞ்ச இருக்கவேண்டாம். உடமையளைத் தூக்கிக்கொண்டுபோய் வெட்டையிலேயே இருங்கோ" என்று பொறுப்பாளர் துரத்திவிட்டார். "சரியக்கா" என்றவாறு மூவரும் மறுபேச்சுப் பேசாமல் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். போனவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காக மாலையில் பொறுப்பாளர் தேடிப் போனார். அங்கே இலை, குழை, ஓலைகளால் ஒரு வட்டக்குடில் அமைக்கப்பட்டு, உள்ளே வெண்மணல் பரப்பப்பட்டு, பெருட்

(09ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

# சாதனைகளின் ஊற்றுக்கண் - மேஜர் கனீபா

சாதிக்க வேண்டும் என்பதன்றி வேறு சிந்தனைகள் அவளிடம் இருக்கவில்லை. ஓயாத அலைகள்-02 இன்போது தனக்குரிய பகுதியை நிச்சயமாகப் பிடிப்பேன். சண்டையில் இரண்டு அதிகாரிகளைப் பிடித்து போனமுறை (1998.02.01 இல்) உள்ளே வந்து வீரச்சாவடைந்தவர்களை என்ன செய்தீர்கள் என்று கேட்பேன் என்றுதான் சண்டை தொடங்கும்வரை சொல்லிக்கொண்டிருந்தாள்.

சண்டையின்போதான அவளது அணியின் நகர்வு இலகுவாக இருக்கவில்லை. ஒரு கட்டிடக்காடாக இருந்த அந்தப் பெருந்தளத்தை நெருங்குவதற்காய், ஆங்காங்கே சில மரங்களை மட்டும் கொண்ட நீண்ட வயல்வெளியை எதிரியின் கண்காணிப்பு நிலைகள், அவதானிப்புக் கோபுரங்கள் என்பவை அறியாதவாறு மிகக் கவனமாகக் கடந்து, வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலிகளை, சுருள்கம்பி வலைகளை, கண்ணிவெடிகளை அகற்றி, ஓடுகளை வழுவியவாறு மண் அணை மீதிருந்த வேலியைப் பிரித்து, அதன் பின்னிருந்த முட்கம்பி வேலிகளையும் வெட்டி, அதன் வழியாக உள்நுழைந்து வலமும் இடமும் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை — அல்ல அல்ல காவற் கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டுபோய்... சண்டை மிகவும் உக்கிரமாகவே நடந்தது. கனீபாவால் கைப்பற்றப்பட்ட காவலரண்கள் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் போகும் பிரதான வீதியுடன் அமைந்திருந்ததால், நகரப் பகுதிக்குப் போகும் முக்கிய பாதையொன்றை எம்மிடம் இழப்பதில் ஏற்படப்போகும் இராணுவப் பின்னடைவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் இழந்த காவலரண்களை மீளக் கைப்பற்றுவதில் படையினர் கடுமையாக முயன்றனர். கைப்பற்றிய பகுதியைத் தக்கவைக்க கனீபாவின் அணியும் உக்கிரமாகப் போராடியது. தமது தளத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே பலமான நிலைகளை அமைத்து ஆயுத, ஆள் பலத்தைக் குவித்து வைத்திருந்த படையினருக்கும், குறிப்பிட்டளவு ஆயுத தளபாடங்களுடன் உட்புகுந்த கனீபாவின் அணியினருக்குமிடையே நடந்த கடுமையான சண்டையில் கனீபாவின் அணி அதிக இழப்புகளைச் சந்தித்தது. உதவிக்கெனப் போன சிறு அணியும் இழப்புகளைச் சந்திக்க, படையினர் கடும் முயற்சியின்பின் தமது பழைய நிலைகளைப் பிடித்துக்கொண்டனர். எஞ்சிய ஒரு சிலருடனும் வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள், ஆயுதங்களுடனும் கனீபா எதிரியின் காவல் வேலிக்கு உள்ளே.

கிளிநொச்சியைச் சூழ பரவலாக நடந்த சண்டையில் ஏனைய பகுதிகள் எம்மால் கைப்பற்றப்பட்டு துடைத்து அழிக்கப்பட்டுக்கொண்டிருக்க, ஒரு சிறு பொறிக்குள் கனீபா தனித்துப் போராடினாள். ஒரு பகுதியை உடைத்துக் கொண்டு எஞ்சியிருந்தவர்களுடன் தப்பி வருமாறு அறிவிக்கப்பட்டபோது வீரச்சாவடைந்தவர்களையும் அவர்களின் ஆயுதங்களையும் விட்டு வெளியேற மறுத்துவிட்டாள். காயப்பட்ட போராளிகளை வெளியேற்றியபின்னர், தன்னுடன் எஞ்சியிருந்த ஒரு சிலரையும் வெளியேறுமாறு பணித்தாள். அவர்கள் கனீபாவை தனித்துவிட்டு வெளியேற மறுக்க, அவர்களை நெருக்கியவாறு நான்கு புறமும் இராணுவம் குவியத் தொடங்க, நிலைமையைக் கூறி, இலக்குகளைக் குறிப்பிட்டு, தங்களைப் பொருட்படுத்தாது எறிகணைகளை ஏவுமாறு அறிவித்தாள். வீரம் நிறைந்த அந்தச் சண்டையில் கனீபாவை நாங்கள் இழந்தோம்.

மட்டக்களப்பிலே எமது அமைப்புக்கு ஆதரவான குடும்பமொன்றிலே பிறந்த கனீபா 1990 இன் ஆரம்பத்திலே அங்கிருந்து காடு மேடெல்லாம் கடந்து, இராணுவச் சுற்றிவளைப்புகளிலிருந்து தப்பி கால்நடையாக வன்னிக்கு வந்து 07 வது பயிற்சி முகாமிலே தன் பயிற்சியை ஆரம்பித்தபோது அவள் சின்னவள். பயிற்சி முகாமிலும் பின்னர் வேறு சந்தர்ப்பங்களிலும் தனக்கு மிகவும் விருப்பமான ''காகங்களே காகங்களே காட்டுக்குப் போனீர்



## போராளியின் குருதிச்சுவடுகள்

களா'' பாட்டுக்கு அவள் ஆடும் நடனம் எல்லோருக்குமே விருப்பமானது. யார்மீதும் கோபப்படாத அவள்மீதும் யாரும் கோபப்பட்டதில்லை.

''சரியான பகிடிக்காரி. ஒரு வால் முளைக்காத குறை'' என்றாள் அவளோடு நீண்டகாலம் ஒன்றாக நின்ற ஒருத்தி. ஆனையிறவுப் பகுதியில் எதிரியின் பலவேகய - 2 க்கான எதிர் நடவடிக்கையின்போது எம்மவர்களால் எதிரியின் அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. வீழ்ந்துகொண்டிருந்த விமானத்தை நோக்கி தன் துப்பாக்கியால் சுட்டு விட்டு, விமானத்தைத் தன்னுடைய அணி வீழ்த்தி விட்டதாக களத்தின் வேறொரு மூலையில் நின்ற தன்

- மலைமகள் -

தோழிகளுக்கு தொலைத்தொடர்பு சாதனம் மூலம் அறிவிக்க, எல்லோரும் நம்பியேவிட்டார்கள். பிறகுதான் உண்மை தெரிந்து தாங்கள் ஏமாந்தது புரிந்து சிரித்தார்கள். எந்தச் சண்டையின்போதுமே அவள் தனது பகிடிக் குணத்தைக் கைவிட்டதில்லை.

எட்டு வருடங்களின் முன் பலாலியைச் சூழவிருந்த காவலரண்களின் குறிப்பிட்ட எண்ணிக்கையானவற்றை மிகுந்த நம்பிக்கையோடு தலைவர் எமது படையணியிடம் தனித்துவமாகப் பொறுப்புக் கொடுத்திருந்த காலப் பகுதியில்தான், வழிமறித்துத் தாக்கும் எமது இப்போதைய வளர்ச்சிநிலையின் அத்திவாரம் பலமாக அமைக்கப்பட்டது. அந்த நேரத்தில் வழிமறிப்புச் சண்டை அனுபவம் சிறிதுமற்ற, ஆனால் மனஉறுதியில் நம்பிக்கை வைத்த நிலையில்தான் எமது படையணி அன்றைய சூழ்நிலையை எதிர்கொண்டது. ஆரம்பத்தில் மிக நெருக்கமாக அமைந்த கட்டிடங்களிடையேயும் வாழைத்தோட்டங்களிடையேயும் ''விழிபிதுங்க'' காவற் கடமையில் நின்றதும், படையினரும் இவர்களின் பக்கமாகவே அதிக தொல்லைகள் கொடுத்ததும், குறிப்பிட்ட காலத்தின்பின் நிலைமை வேறுவிதமாகி படையினர் இவர்களின் பக்கம் தலையைக் காட்டத் தயங்கியதுவுமாக ஒன்றரை வருடமாக நீடித்த அந்த வாழ்வையும், தங்கள் மேல் தலைவர் வைத்த நம்பிக்கையை இன்றுவரை தக்க வைத்துக் கொள்வதையும் கனீபா இடையிடையில் தன் பழைய தோழியருடன் இரைமீட்டுக் கொள்வாள்.

1990, 1991 இலே பலாலியைச் சூழவிருந்த காவலரண் பகுதியிலே அவ்வப்போது நடந்த சண்டைகள், ஆகாய கடல் வெளிச்சமர், பலவேகய-1, 11, கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பு, தொண்டைமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான நாற்றைம்பது காவலரண்கள் அழிப்பு என்பவற்றில் பங்குகொண்டபின் இராணுவ அதிகாரியாகப் பயிற்சி அளிக்கப்பட்டு சண்டைகளுக்கான பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றினாள். இவளின் நுணுக்கமான ரசனைக்கும் கலையுணர்வுக்கும் எடுத்துக்காட்டாக அதிகாரிகள் பயிற்சியின் போதான நாடகம் ஒன்று இன்றும் நெஞ்சில் நிழலாடுவதைக் குறிப்பிடலாம்.

கலை நிகழ்வென்று கல்லூரியே களைகட்டிவிடும். பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் போட்டியாக நிகழ்ச்சி தயாரிப்பார்கள். தொடர் வகுப்புகளுக்கும் பயிற்சிகளுக்கும் இடையில் கிடைக்கும் சிறு ஓய்வின்போது அவசர அவசரமாக தயாரித்து, சில வேளைகளில் கடைசி ஒத்திகைகூடச் செய்யாமல் மேடையேறி, ஆனால் தரம் குன்றாமல் சமாளித்து அசத்திவிடுவார்கள்.

அன்றும் அப்படித்தான் நாடகம் அரங்கேறியது. சும்மா ஒருமுறை செய்து பார்த்துவிட்டு, மேடையேறும் போதுதான் அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு ஒப்பனை செய்து கொண்டனர். அவர்களின் திட்டப்படி ஒரு கள்ளுக்கடையை முதலாளி திறக்கும் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகும். கனீபாதான் முதலாளி. மேடையிலே திரை விலகியது. மேசையொன்றிலே வெள்ளைத் திரவம் நிரப்பப்பட்ட போத்தல்களைக் கண்டு நாடகக் கோஷ்டியே திகைத்துப்போனது. கனீபா உண்மையாக கள்ளையே நிரப்பினாளோ, சவர்க்காரத்தை கரைத்து நிரப்பினாளோ என்ற அச்சத்திலேயே குடிப்பதுபோல் நடிக்க வேண்டியவர்களுக்கு வயிறு பகீரென்றது. திரை விலகிய பின்னும் மேடையில் கனீபாவைக் காணவில்லை. பார்வையாளர்களுக்கு நடுவேயிருந்து கனீபாவின் சின்ன உருவம் பட்டையான திருநீற்றுப் பூச்சுடனும் மடித்த சறக் கட்டுடனும் கையில் கொழுத்தப்பட்ட சாம்பிராணிக்குச்சிகளுடன் வந்து தாவி மேடையேறியது. போத்தல்களைச் சுற்றிச் சுற்றி சாம்பிராணிப் புகை காட்டிய கனீபா மேசையின் ஓரத்தில் அவற்றைக் குத்தி நிறுத்தி விட்டு, இரண்டு கைகளாலும் நெற்றியில் குட்டித் தோப்புக்கரணமும் போட்டுவிட்டு கல்லாப்பெட்டியில் குந்தினாள். எல்லோருக்குமே சிரிப்பை அடக்கமுடியாமல் போய்விட்டது நாடகம் தொடர்ந்து நடந்தது. கள் குடிப்பவர்களாக நடிப்பவர்கள் வெள்ளைத் திரவத்தை மிக அருகில் பார்த்து, அது அந்த மாதம் முடியும்வரையில் குடிக்க வேண்டிய தேநீருக்குரிய லக்ஸ்பிறே என்பதை இனங்கண்டு வயிறெரிந்ததும், அவர்களை கனீபா ஒருவாறு சமாளித்ததும் எஞ்சியிருக்கும் ஒரு சிலரின் நினைவில் இன்றும் பசுமையாக இருக்கிறது.

மேஜர் மதனா, மேஜர் தாரணி இருவருமே கனீபாவின் சக பயிற்சி ஆசிரியர்கள். அப்போது சண்டைக்கான மாதிரிப் பயிற்சி ஒன்று நடந்துகொண்டிருந்தது. நடந்த இடம் ஒரு பெரிய இராணுவத் தளத்தின் அயல். பகலில் தொடங்கும் பயிற்சி நள்ளிரவுவரையும் தொடரும். அதன் பின்னர்தான் எல்லோரும் நீண்ட தொலைவிலுள்ள தங்குமிடத்துக்கு நடந்து வந்து சேர்ந்து, ஆயுதம் துப்பரவு செய்து, குளித்துவிட்டுப் படுப்பார்கள். அன்றிரவு பயிற்சி முடியத் தாமதமாகிவிட்டது. பயிற்சியாளர்கள் வந்துவிட்டார்கள். இவர்கள் மூவரையும் காணோம். பயிற்சி நடக்கும் வெளியொன்றிலேயே படுத்து உறங்கிவிட்டு காலையில் தங்குமிடத்துக்கு திரும்பிய மூவரையும், ''கொட்டில் தேவையில்லையெண்டுதானே வெட்டையில போய்ப் படுத்தனீங்கள். இனி இஞ்ச இருக்கவேண்டாம். உடமையளைத் தூக்கிக்கொண்டுபோய் வெட்டையிலேயே இருங்கோ'' என்று பொறுப்பாளர் துரத்திவிட்டார். ''சரியக்கா'' என்றவாறு மூவரும் மறுபேச்சுப் பேசாமல் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். போனவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காக மாலையில் பொறுப்பாளர் தேடிப் போனார். அங்கே இலை, குழை, ஓலைகளால் ஒரு வட்டக்குடில் அமைக்கப்பட்டு, உள்ளே வெண்மணல் பரப்பப்பட்டு, பொருட்

(09ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

## மயிரிழையில் உயிர்தப்பிய ரத்வத்த

ஒட்டுசுட்டானை இராணுவம் கைப்பற்றி மூன்றாம் நாள் - 6. 12. 98 அன்று - பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கைப்பற்றப்பட்ட பகுதிக்குச் சென்றிருந்தார்.

படையினரால் பிடிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பகுதி மக்களை சிவன்கோவிலுக்குள் கூட்டி வந்து அவர்கள் மத்தியில் ரத்வத்த உரையாற்றினார். உரையாற்றி முடிந்து முப்படைத்தளபதிகளுடனும் புறப்பட்ட ரத்வத்த, கோவில்வாசலைக் கடந்தபொழுது 120 மி. மீ. எறிகணைகளும் - 81 மி .மீ . எறிகணைகளும் வந்து விழுந்து வெடித்தன. ஐந்து படையினர் உடனேயே பலியாகினர். நாற்பது படையினர் காயம் பட்டனர். இவர்களில் சிலர் படுகாயமடைந்தனர். ரத்வத்தவும் - முப்படைத்தளபதிகளும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

சம்பவ இடத்திலிருந்து துருப்புக்காவியில் ஏறி விரைந்தனர். அந்த துருப்புக்காவியில் ரத்வத்தவுடன் மேஜர் ஜெனரல் பல்லேகலவும் அவரது ஆட்களும் இருந்தனர். துருப்புக்காவி உச்ச வேகத்தில் ஓடத்தொடங்கியபோது தூசி மண்டலம் வானை நோக்கி எழுந்தது.

துருப்புக்காவிக்கு உள்ளே ரத்வத்த பதட்டத்துடன் நின்றிருந்தார். அதிர்ச்சியடைந்தவர் போல் காணப்பட்டார். நான்கு நட்சத்திரங்கள் பதித்த ஜெனரலுக்குரிய சின்னத்துடன் இராணுவக் கோவுடை தரித்து - சிவப்புநிற கொமாண்டோ தொப்பி அணிந்திருந்தார். சிறிது தூரம் சென்றதும் துருப்புக்காவிக்கு மேலே தலையை நீட்டிக்கொண்டிருந்தார்.

வேகத்தைக் கூட்டி துருப்புக்காவி மேலும் ஓடத்தொடங்கியபோது உள்ளே இருந்தவர்கள் பீதியடைந்தனர். துருப்புக்காவி பிழையான பாதையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி நோக்கிச் செல்ல எத்தனித்தது. ஒரு இளம் அதிகாரி ஓட்டுனரது தோளில் பலமாக அடித்து - திசையை மாற்றும்படி பலத்துக்கத்தினார்.

சென்ற வேகத்திலேயே துருப்புக்காவியை மடக்கி தெருவோரப் புதர்களுக்கூடாகத் திருப்பிய ஓட்டுனர், நெடுங்கேணி நோக்கி திரும்பினார். சற்றுமுன் புலிகளின் எறிகணைத் தாக்குதலில் மயிரிழையில் உயிராபத்தைத் தவிர்த்த ரத்வத்த, இதன்மூலம், மீண்டுமொரு உயிராபத்திலிருந்து மீண்டார்.

ஒட்டுசுட்டான் விஜயத்தின் போது ரத்வத்தவுடன் முப்படைத் தளபதிகளும் சென்றிருந்தனர். வெலிஓயாவிலுள்ள " எத்தவெடுனவெவ" என்ற இடத்திற்கு லெப். ஜெனரல் தளுவத்த - றியர் அட்மிரல் சிசிக் பெரேரா - ஏயர் வைஸ் மார்சல் ஜெயலத் வீரக்கொடி ஆகியோருடன் சென்ற ரத்வத்த, அங்கிருந்து துருப்புக்காவிகளில் நெடுங்கேணியூடாக ஒட்டுசுட்டானுக்கு வந்திருந்தார்.

சிங்கள இராணுவத்தினர்போல் உடையணிந்து- படையினர் கைப்பற்றிய பகுதியில் புலிகள் வானொலித்தொடர்புடன் நின்றிருந்தனர் என படையினர் நம்புகின்றனர். இந்த புலி உறுப்பினர்கள் ரத்வத்தவின் நடமாட்டங்களை அவதானித்து தமது முகாங்களுக்கு அறிவித்திருப்பார்கள் என்று இராணுவப் புலனாய்வினர் கருதுகின்றனர்.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் நிலைகொண்டுள்ள படைவீரர்கள் தம்மை அடையாளம் காட்டக் கூடியவகையில் தருந்த ஏற்பாடுகளைச் செய்து - புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும்படி வன்னியிலுள்ள படைமுகாங்கள் அனைத்துக்கும் படைத்தலைமைப்பீடம் கட்டளைகளை அனுப்பியுள்ளது.

புலிகளின் எறிகணைத் தாக்குதலிலிருந்து ரத்வத்த உயிர்தப்பிய இந்தச்சம்பவம் நடந்து சரியாக இரண்டு வருடங்களுக்கு முன் ( 06 . 12 . 1996 ) நடந்த வேறொரு சம்பவத்தில் ரத்வத்த மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். அவர் சென்ற உலங்குவானூர்தி வவுனியா மாவட்டத்தில் புலிகளின் பகுதியில் பழுதடைந்து தரையிறங்கியிருந்தது. இந்த வானூர்தியில் ரத்வத்தவுடன் இராணுவத் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் தளுவத்த, பொலிஸ்மா அதிபருடன் சில அரசாங்க அரசியல்வாதிகளும் இருந்தனர்.

இவ்விதம் இரண்டு தடவைகள் முப்படைத் தளபதிகளும் - ரத்வத்தவும் மரணத்திலிருந்து தப்பியிருந்தனர்.

முன்னாள் பிரித்தானியப் பிரதமமந்திரி மாக்கிரட் தட்சரை கொல்ல -வைத்த குண்டு வெடித்திருந்தும் அவர் அதிஸ்டவசமாக உயிர்தப்பியிருந்தார். குண்டை வைத்த ஐ . ஆர் . ஏ இயக்கப் போராளிகள் இது தொடர்பாகத் தெரிவித்த கருத்து பிரபலமாகியது.

"மாக்கிரட் தட்சருக்கு எப்பொழுதும் அதிஷ்டம் கைகொடுக்கவேண்டும். எங்களுக்கு ( ஐ. ஆர் ஏ) ஒரே ஒருமுறை அதிஸ்டம் இருந்தால் போதும்" என்பதே அந்த வாக்கியமாகும்.

( சண்டேடைம்ஸ் ( 13 . 12 . 98 ) இல் வெளிவந்த களநிலைமை தொடர்பான அறிக்கையிலிருந்து சில பகுதிகள் )

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி )

### சாதனை....

கள் எல்லாம் நட்டி ஒன்றிலே ஒழுங்காக அடுக்கப்பட்டு, வாசலில் "நல்வரவு" என்று எழுதப்பட்டு, "வாங்கோ அக்கா" என்று வரவேற்பு அளிக்கப்பட்டு, தேநீர் கொடுத்து உபசரிக்கப்பட்டு, ஒன்றுமே நடக்காததுபோல கவிபா இயல்பாக உரையாடலைத் தொடர்ந்தாள். சவால்களைக்கூட விளையாட்டாகச் சமாளிக்கும் வல்லமை அவளிடம் இயல்பாகவே இருந்தது.

கவிபாவின் வளர்ச்சியில் மேஜர் துளசிக்கு முக்கிய பங்குண்டு. கவிபா சிறுத்தைப் படையணிக்கு பயிற்சி ஆசிரியராக இருந்தகாலத்தில் ஒரு தவறு செய்து விட்டு தண்டனையில் சமைத்துக்கொண்டிருந்தாள். இவளோடு ஒன்றாகவே அடிப்படைப் பயிற்சி எடுத்த துளசி அறிவு முதிர்ச்சியுள்ள நிதானமான போராளி. அவருக்கு குடுகுடுவென ஓடித் திரியும் கவிபாவில் நல்ல நேசம். தண்டனையில் சமைத்துக்கொண்டிருந்த கவிபாவை தான் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவருவதாக பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டு, அவளைத் தண்டனையிலிருந்து எடுத்து தன்னுடன் வைத்திருந்தார்.

"இஞ்ச வா கவிபா, நான் உனக்கு ஒரு விளையாட்டுச் சொல்லித்தாறன்" என்று அவளைத் தன்னருகே இருத்தி, கணனியின் செயற்பாடுகளைச் செய்து காண்பிக்க, கவிபாவுக்கு அது ஆச்சரியமான - புதுமையான விளையாட்டாக இருக்கவே ஆர்வத்துடன் ஈடுபட்டாள். தான் கணனி கற்பிக்கப்படுவதை அறியாமலேயே அதில் தேர்ச்சி பெற்றுவிட்டாள். அவளுக்குத் தன்னையே நம்பமுடியவில்லை. தன்னை விளையாட்டு விளையாட்டாக நல்ல நிலைக்குக் கொண்டுவந்த துளசியில் அவளுக்குச் சரியான மதிப்பும் பாசமும் எப்போதுமே உண்டு. இரண்டு பேருமே ஒன்றாக களத்தில் நின்ற போது, கவிபாவின் ஒன்றுவிட்ட சகோதரியான லெப்.கேணல் மதனா மட்டு-அம்பாறை அதிரடிப்படைத் தளத் தகர்ப்பில் வீரச்சாவடைய, இயக்கத்தில் இணைந்து ஏழு ஆண்டுகளின் பின் அப்போது தான் முதன் முதலாக விடுமுறையில் மட்டக்களப்பிலிருந்த தன் குடும்பத்திடம் போனாள் .

விடுமுறை முடிந்து ஒரு மாதத்தின் பின் வன்னி திரும்பியவளுக்கு மேஜர் துளசியின் வீரச்சாவுச் செய்தி பெரிய அதிர்ச்சியைத் தந்தது. அந்த அதிர்ச்சியுடனேயே ஜயசிக்குறுய் களத்துக்குத் திரும்பிவந்துவிட்டாள்.

தன் அணியிலிருந்த போராளிகள் யாரையுமே அவள் கடிந்து கொண்டதில்லை. நெருக்கடியான நேரங்களில் வேலைகள் நடந்து முடிந்திருக்காவிட்டால், நிலைமையின் அவசரத்தை விளக்குவாளே தவிர, யாரையும் சினந்ததில்லை. யார் மனதையும் நோகப் பண்ணியதில்லை. யாருடைய வாழ்நாள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று யாருக்குமே தெரியாததால் எல்லோருக்குமே தன் அன்பைக் கொடுத்தாள், எல்லோருக்குமே உதவி செய்ய விரும்பினாள்.

சண்டைக்கு புறப்படும் கடைசி நேரத்தில், மறிப்புத் தாக்குதல் அணியை வழிநடத்தப் போகும் லெப். கேணல் செல்வியிடம் ஓடிச் சென்று, " கவனம், உங்களுக்கு ஏதும் பிரச்சினையெண்டால் எனக்கு அறிவியுங்கோ. நான் என்ர வேலையை முடிச்சிட்டு சப்போட்டுக்கு வருவன் " என்றாள்.

கவிபா விருப்பப்பட்டமாதிரியே இந்தச் சண்டையில் பெண் போராளிகள் ஏராளம் படையினரைக் கொன்றனர்.

தெருவெங்கும் குருதி வடிய, சிதறிக் கிடந்த படையினரின் உடலங்களிடையே நாம் நடந்த போது, படையினர் தப்பியோடிய வழியெங்கும் அவர்கள் வீசியெறிந்த ஆயுதங்கள், ஆவணங்கள், உடமைகள், இராணுவப் பட்டிகள், பாதணிகள், இன்ன பிறவெல்லாம் இறைந்து கிடந்தபோது, நிலைகளிலிருந்து பிடுங்கி ஏற்றப்பட்ட பாரம் மோட்டார் பீரங்கிகளுடன் இராணுவ வாகனங்கள் நின்றபோது, வெற்றிக் கொடியை தளபதி விதுஷா அவர்கள் ஏற்றியபோது பார்த்து அமைதியுற கவிபா இருக்கவில்லை.

( 05ஆம் பக்கத் தொடர்ச்சி )

### மனவெளி....

கேள்விகள் எழுகின்றன. தலைக்கனம்
மிக்க செயற்பாடுகள், அவரது
இராசதந்திர சறுக்கல்கள் எல்லாமே அவரது
பட்டங்களின் பட்டியலை விட மிக
நீண்டவையாகி விட்டன.

லண்டனிலுள்ள சுரேஸ் மாணிக்கவாசகம்
நாடு கடத்தப்படுவது உறுதி. நாடு வந்தவுடன்
அவரை "தக்க முறையில்"
கவனிப்போம். அவர் ஒரு பெரும் புள்ளியென
நாவடக்கமின்றி அரசியல் நாகரீகமின்றி
கதிர்காமர் கதையளந்ததோடு
தொடங்கிய அவரது வீழ்ச்சி, இப்போது
தென்னாபிரிக்காவில் இராசதந்திர சவாரி
செய்து புலிவேட்டையாடப்போய்
புனுகுப் பூனையும் பிடிக்காமல்
திரும்பியதோடு முற்றுப்பெறுகின்றது.
நாம் கேட்கவில்லை. நாடாளுமன்றிலே அனுரா
கேட்கின்றார், "எமது நாட்டின்
வெளிநாட்டமைச்சு என்ன
தனியொருவரின் சொத்தடிமைச்
சொத்தா என முழக்கமிட்ட அனுரா,
அமெரிக்காவில் என்ன . நடக்கின்றது?
புலி அமைப்பாளரும் சட்ட ஆலோசகருமான
உருத்திரகுமாரனோ, அமெரிக்காவில்
புலிகள் செயற்பாட்டுப் பொறுப்பாளர்
கருணாவோ என்ன காணாமலா
போய்விட்டார்கள்? வழமையாக அவர்கள்
அங்கு செயற்படுகின்றார்களே" என்கிறார்.
தராக்கி கேட்கிறார் -
பிரித்தானியாவிலிருந்து புலிகள் தமது
செயலகத்தை தென்னாபிரிக்கா மாற்றப்
போவதாக எவர் கதை கட்டிவிட்டார்கள்?
லாதரின் வீதியில் "ஈழம் இல்லம்"
வழமையாக இயங்குகின்றதே.
தென்னாபிரிக்காவில் இவ்வாரம் தமிழர்
ஆதரவான அமைப்பு
மிகச் சிறப்பாக மாவீரர் நினைவு தினத்தை
கொண்டாடுவதை கதிர்காமர்
அறியாரா? ஆபிரிக்க தேசியக்
காங்கிரசுக்கும் தமிழ்ப் போராளிகட்குமுள்ள
உறவு பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்?
எவ்வகையில் கதிர்காமரின்
தென்னாபிரிக்கப் பயணம் புலிகளின்
இராணுவ, நிதி வலிமையினை குறைக்க
உதவியது என்பதை இந்நாட்டு மக்களுக்கு
விவக்க கதிர்காமர் முன் வருவாரா
என கேள்வி எழுப்புகின்றார் தராக்கி.

இன்று எம் மக்கள் மனவெளி
அரங்கிலே தலைகுனிந்து குற்றவாளியாக
நிற்கிறார் கதிர்காமர். சந்திரிகா
அம்மையாரோடு எமக்கு ஏது உறவு என
நிலனும், கூட்டணியும் கைவிரித்தவாறு
நாடகமாடுகையில் — கதிர்காமர்
இந்த நாடகத்தில் தன்னும் பங்கு பற்ற
முடியாது பொறிக்குள் சிக்கி நிற்கின்றார்.
நுட்ப மூளைத்திறன் கொண்ட
இவர்களுக்கு என்ன புரியவில்லை?
விரைவில் கழிவிரக்கத்தால் கைவிடப் போகும்
கதிர்காமர் பாரதியாரைத் தன்னும்
படித்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?
" நின்னருள் ( சுதந்திரதேவியின் )
பெற்றிலாதோர்
— .. ... — — — —
பன்னரும் கல்வி கேள்வி
படைத்துயர்ந்திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள் வேய் பிணத்தோடொப்பர்"
அல்லது கதிர்காமர் போல்
மெத்தப்படிக்காவிட்டாலும்,
" சுதந்திரத்துக்காய் சாவதற்கு
தயக்கம் ஒன்றும் எமக்கில்லை
வரலாறு என்றும் எம்மை
வாழவைக்கும் " —.....
என மாங்குளம் ஜயசிக்குறுய் எதிர்
நடவடிக்கை கட்டளைப்
பணியகத்திலிருந்து வெளிவரும்
' சுதந்திரக்காற்று ' ஏட்டில் பாடிய
செந்தமிழன் மனநிலையைத் தன்னும் கதிர்காமர்
அறிவாரா? அப்படியானால் இதுவரை
எதை அறிந்தார் கதிர்காமர்?





www.eelamview.com

# உயிருருவும் எறிகணைகள்

- எஸ். உமாஜிப்ரான் -

## நிகழ்வு - 01

வினோதாவின் சுட்டித்தனங்களையும் கெட்டித்தனங்களையும் ரசிக்கின்ற யாரும், அவளுக்கு மூன்று வயது என்று சொன்னால் நம்பமாட்டார்கள். ஆனால், அவளுக்கு மூன்றே மூன்று வயதுதான்.

வினோதா அழகாக அபிநயித்துப் பாடுவாள். எங்கள் தேசத்தின் எழுச்சிப்பாடல்களை அவளின் மழலைமொழியில் கேட்கும்போது கல்லாய்க் கனத்த பொழுதும் கற்பூரமாய்க் கரையும். ஞானப்பால் குடிக்காத ஞானசம்பந்தி என்று வினோதாவின் அம்மா சிவதேவி, தன் மகளைக் கொண்டாடுவாள்.

விசுவமடுக் கிராமத்தில் போதாமையைக் கொண்ட ஒரு அகதிக் குடிசைதான் அவர்களின் வாழ்விடம். இடப்பெயர்வு ஏற்றிவிட்ட பொருளாதாரச் சுமைகளின் பாரத்தை வினோதாவின் மழலைச் சுகத்தில் அவர்கள் மறந்துவிட்டிருந்தார்கள். வினோதா கடைக்குட்டி. வினோதாவிற்கு ஒரு அக்கா மட்டுமே இருந்தாள். வினோதாவின் குழந்தைமைச் செல்வம், அவர்களின் வாழ்வை இனிதாகச்செலவிட போதுமானதாக இருந்தது.

அந்தக் குடும்பத்தின் நாசிக்குரியது அச்சுவேலி மண்வாசனைதான். "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கை அவர்களை விசுவமடு மண்ணையும் நுகரவைத்தது. "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கை ஆண்டில்தான் வினோதாவும் பிறந்தாள். கைக்குழந்தையாக வன்னிக்கு வந்தவள், இன்று, துள்ளி நடக்கும் மூன்று வயதில் துடிதுடித்துச் செத்துப்போனாள். நோய் நொடியிலோ, வாகன இடியிலோ வினோதா செத்துப்போகவில்லை. அவளுக்கும் எறிகணைதான் எமன். அவளின் கோரச்சாவை, அவளை ஈன்றவள் பார்க்கவேண்டாம் என்று அவள் நினைத்தாளோ அல்லது ஆண்டவன் நினைத்தானோ தெரியவில்லை, வினோதா, தன் பேத்தியார் வீட்டில்தான் செத்துப்போனாள்.

அதுவும் ஒரு அகதிக் குடிசைதான். குடிசை முற்றம் வினோதாவின் குறும்புத்தனங்களில் கலகலத்துப்போயிருந்தது. அவளின் ஆசைமாமன்கள் அவளைச் சீண்ட, அவள் அவர்களைச் சீண்ட, அரங்கேறிய வினோதாவின் மழலைக்கூத்தில் எல்லோருமே குழந்தைகளாகிக் குதுகலித்திருந்த ஒரு மாலைப்பொழுது அது.

சைக்கிள் டைனமோ மின்சாரத்தில் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. குடிசை முற்றத்துக்கு வெளியே - புறச்சூழல் இயக்கமொன்று இருப்பதையே அவர்கள் மறந்திருந்தார்கள். அதனால், ஆனையிறவுப்படைத்தள ஆட்டிலறிகளின் எறிகணை ஏவலொலியை அவர்கள் உணரவில்லை. இடியும் மின்னலுமாக அந்த எறிகணைகளில் ஒன்று முற்றத்தில் பிளந்தது. சுதாகரிக்கச் சந்தர்ப்பமேயில்லை. நொடியில முற்றம் இரத்தமும் சதையுமாய் ஆகியிருந்தது.

வினோதா வாய்ப்பேதையும் வழங்காமல் செத்திருந்தாள். சின்னஞ்சிறு பெண்ணை எறிகணைச்சில்லுகள் சிதைத்துக் கொன்றிருந்தன. இரண்டு கால்களுமில்லை. ஒரு காது இல்லை. அந்தப் பிஞ்சுடலை எள்ளிருக்க இடமில்லாமல் இரும்புச் சில்லுகள் துளைத்திருந்தன. வினோதாவின் மாமன்கள் இருவரில், ஒருவர் மருமகளோடு கூடவே போய்விட்டிருந்தார். மற்றவருக்கு காயம்.

" சூரியனில பழுதுகண்டாலும் எங்கட பஞ்சவர்ணக்கிளியில ஒரு பழுது சொல்லுவியளே! " என்று பெரியம்மா பெருமைபேசும் பேறாமகள் பழுதாகிக் கிடந்தாள்.

அற்பவயதில் பிள்ளைகளை அள்ளிக்கொடுத்து விட்டு அம்மாக்கள் பாடுகின்ற அதே ஒப்பாரியை அம்மாவும் ஒப்புவித்தாள். அணைந்துவிடப்போகின்ற அவசரத்தில்தான் நீ அப்படி வயதுக்குமீறி ஜொலித்தாயா? பாவப்பெண்ணே! நீ இன்னும் வாழவே இல்லையே. அதற்குள் என்ன அவசரம் உனக்கு; திடுதிப்பென்று போவதற்கு. நீ அம்மாவுக்குப் பக்கத்தில் நின்றிருந்தால், அம்மாவும் உன்னோடு வந்திருப்பேனே. தாளமுடியாமல் கதறினாள் அம்மா.



அம்மாவுடன்
(ஒரு வயதில்) வினோதா

எங்கள் தேசத்தின் சாவீடுகளில் ஒப்பாரிக்குரிய புகழுடல்கள் அனேகமாக பிஞ்சுடல்களாகவே இருக்கின்றன. இறந்துபோன உடலுக்குரிய உறவுப்பெயர், ஐயோ அம்மா / ஐயோ அப்பா என்றிருப்பதை விடவும், ஐயோ மகனே/ ஐயோ மகளே என்றிருப்பதுதானே அதிகம். இந்தத் தேசத்தின் காற்று துயர்தாளாமல் இந்தச் சாவோலத்தைத்தானே சுமந்தலைகிறது. ○

## நிகழ்வு - 02

பிரகாஸ் பிறந்த சொற்பநாட்களில் அப்பாவிற்கு விழுக்ச்சிராய் கண்ணிவெடித்து ஒரு கண்பார்வை போய்விட்டது. ஆனால், விபரம் புரியத்தொடங்கிய வயதிலிருந்து பிரகாஸ் அப்பாவுக்கு கண்ணாகவே இருந்தான்.

வீட்டின் ஒரேயொரு ஆண்பிள்ளைக்கு இருக்கும் அத்தனை செல்லங்களும் பிரகாசுக்கும் இருந்தன. நான்கு பெண்பிள்ளைகளுக்கு அம்மாவுக்குக் கிடைத்தது அவன் ஒருவன்தான். அம்மாவின் மறுமலர்ச்சிக்கோட்டையின் ஊனப்படிமம் அவன்.

பாடசாலைக்குச் செல்கின்ற நேரத்தைத் தவிர, அவன் அம்மாவை விட்டுப் பிரிவதேயில்லை. எந்நேரமும் வீட்டுக்குள்ளேயே வளையவந்துகொண்டிருப்பான். அவனுக்கிருந்த கல்வித்திறனிலும், பொறுப்புணர்விலும் அம்மா உச்சிகுளிர்ந்திருந்தாள்.

அம்மா சரஸ்வதி, தன் பெண்களுக்குச் சொல்லுவாள், "பண்பு, பதவிசு எல்லாத்தையும் என்ர பிள்ளையைப் பார்த்துப் பழகுங்கோ." அத்தனை அமைதியும் அடக்கமுமான சுபாவம் அவனுக்கு. வீட்டில் தப்பித்தவறி யாரேனும் அவனோடு அதிர்ந்துபேசினால் அழுதேவிடுவான். வீட்டில் மட்டுமல்ல அயலிலும் அவன் நல்லபிள்ளை.

பிரகாசின் அம்மா, அப்பா பிறந்து வளர்ந்ததெல்லாம் கண்டி. தெற்கில் நிகழ்ந்த இனக்கலவரங்கள் ஒன்றின்பின் அங்கிருந்து பெயர்ந்த தங்களின் வாழ்வை விசுவமடுவில் பதியனிட்டுக்கொண்டார்கள். பரவாயில்லாமல் செழித்திருந்தது அவர்களின் வாழ்வு.

மாவீரர்நாளுக்கான அலங்காரத்தில் வீதிகளெல்லாம் அழகு பூத்துக்கிடந்தது. பாடசாலையிலிருந்து வீடுவந்து சேர்வதற்குள் சந்திக்குச் சந்தி, வீட்டுக்கு வீடு வசீகரித்து நின்ற அலங்கார வளைவுகளும், மாவீரர்களின் படங்கள் நிறைந்த அலங்காரக் கொட்டில்களும் பிரகாசின் மனதைக் கொள்ளையிட்டிருந்தன.

கிராமங்கள்தோறும் மக்கள் நெஞ்சுருகி, பரவசித்து, ஒருவித பக்தியோடு மாவீரர்களின் நினைவில் கரைந்தார்கள். மாவீரர்களின் கனவுகள் மெய்ப்படும் காரியங்கள் செய்தார்கள். உணர்ச்சிமயமான வீதியோரக் காட்சிகள், அந்தச் சிறுவனின் பிஞ்சு மனதில் மாவீரர்கள் மீது அவனுக்குள்ள பிரியத்தை கிளறிவிட்டிருந்தன.

வழக்கமாக பள்ளியிலிருந்து வரும்போது அவன் முகத்திலிருக்கும் பசிக்களையை அன்று காணவில்லை. அதை, அவன் மனசுக்குப்பிடித்த ஒன்றைச்

→





www.eelamview.com

25. 11. 98 அன்று ஆனையிறவும் படைத்தளத்திலிருந்து ஏவப்பட்ட ஆட்டிலறி எறிகணைகள் நான்கு உயிர்களைப் பலியெடுத்தன. அந்த நாள்வரில், ஒரு சின்னஞ்சிறுமியினதும் – ஒரு சிறுவனதும் உயிரறுந்த நிகழ்வுகள்.

செய்துவிடவேண்டும் என்ற ஆவல் மறைத்திருந்தது. ஆனால், பிள்ளையின் வயிற்றில் பசியிருப்பதை பெற்றவள் அறியமாட்டாளா! பிள்ளைக்குப் பசிக்கும்போது பெற்றவள் களைப்பாய் உணர்வதுதானே தாய்மை.

அம்மா அவனைச் சாப்பிட அழைத்தாள். அவனோ வீட்டு வாயிலில் மாவீரர்கொட்டில் கட்டும் தன் எண்ணத்தைச் சொன்னான். எதுவானாலும் சாப்பிட்டுவிட்டுச் செய்யும்படி மகனின் தலையைக் கோதியவாறு வாஞ்சையோடு கெஞ்சினாள் அம்மா. தாயின் பாவப்பட்ட மாதிரியான முகபாவனைக்கு நெகிழ்ந்து சாப்பிட மசிந்தான் பிரகாஸ்.

கூடையிலிருந்த மாம்பழம் ஒன்றை சீவித்தரும்படி தாயிடம் கொடுத்துவிட்டு – பசித்த வயிறும் பசிக்காத மனமுமாய், அம்மா பரிமாற அவன் பசியாறலானான். தாயின் பரிவிலும், பரிமாறிய உணவின் ருசியிலும் அவன் மனசுக்கும் பசித்தது



அம்மாவுடன் (பத்து வயதில்) பிரகாஸ்

பிள்ளை ஆசையாய் எடுத்துத்தந்த மாம்பழத்தை அம்மா விறாந்தையில் இருந்து பக்குவமாய் சீவிக்கொண்டிருந்தாள். வீட்டில் இருந்து சொற்ப தூரத்தில் இருந்த குசினிக்குள் கொட்டில் கட்டும் அவசரம் சோற்றுத்தட்டிலும் தெறிக்க பிரகாஸ் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

நேரம் 3. 15 மணியிருக்கும். ஆனையிறவுப் படைத்தளத் திசையிலிருந்து ஆட்டிலறி எறிகணைகள் புறப்படும் பெருத்த ஓசையை காற்று காதிலறைந்து எச்சரித்தது. கிராமங்களின் குடியானவர்கள் எல்லோருமே அவை வேறெங்கேனும்தான் விழுந்து வெடிக்குமென்று எந்த ஆதாரமுமற்று நம்பினார்கள். பிரகாசின் அம்மாவும் அப்படித்தான் நினைத்தாள். ஆனால், புறப்பட்டுவந்த எறிகணைகளில் ஒன்று அந்தத் தாயின் நினைப்பைப் பொய்த்து, அவர்கள் வளர்த்த தென்னம்பிள்ளையொன்றின் இடறி- அதன இடுப்புத்தறிய வெடித்தது.

கவனம் காரியத்தில் கலந்திருந்ததால் வெடியோசை அம்மாவைப் பெரிதாக உலுப்பவில்லை. ஆனால், அம்மா சாய்ந்திருந்த விறாந்தைச் சுவரைத் துளைத்த எறிகணைச் சிதறல்கள், வெடிப்புச் சமீபமென அம்மாவுக்கு உணர்த்தின. குசினிக்குள் சாப்பிட்டுக்கொண்டிருந்த பிரகாசை அழைத்தபடி நெஞ்சு தைக்க வெளியே வந்த அம்மா, குசினி இருந்த இடத்தில் ஒரு கரும்புகைத் திரளைத்தான் கண்டாள். அம்மா செய்வதறியாது கதறினாள். அவளின் பெற்ற வயிறு பெருங்குரலெடுத்துப் புலம்பியது. புகை இன்னும் விலகவில்லை. அவலக்குரல் கொழுவியிழுத்த அயலவர்கள், குசினிக்குள் புகுந்தபோது சோற்றுப்பருக்கைகள் நடுவே குருதியாய்க் கிடந்தான் பிரகாஸ். அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவனின் 'ஆ' வென்ற வாயளவுக்கு கழுத்து 'ஆ' வென்றிருந்தது.

உயிர்பிரிந்துவிடுமோ என்ற அச்சமும் பதட்டமுமாய் அவர்கள் பிரகாசை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற அவதிவேகத்தைவிட, குருதி பெருகுகின்ற வேகம் அதிகமாய் இருந்ததால் பிரகாஸ் பாதிவழியிலேயே பரிதாபமாக இறந்துபோனான்.

அம்மாவின் பசியாற - சாப்பிட்டுக்கொண்டிருந்த பிள்ளையின் பசியாறு முன்னே, ஒரு எறிகணையின் பசிக்கு - எறிகணை ஏவிய படைத்தளத்தின் பசிக்கு - படைத்தளத்தைப் படைத்த சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பசிக்கு- அந்தத் தமிழ்த்தாயின் வாய்த்த ஒரேயொரு சொளிப்பிள்ளை இரையாகிவிட்டிருந்தான்.

பசியோடு - சாப்பிடும்போது செத்துப்போவது எத்தனை கொடுமையானது. அந்த எறிகணைத்துண்டு எப்போது அவன் கழுத்தைத் துளைத்திருக்கும்; சோற்றுக் கவளத்தை வாயில் வைக்க எத்தனித்தபோதா? வைத்த கவளத்தை மென்றும் போதா? மென்று கவளம் தொண்டைக்குழியைத் தாண்டும்போதா? கொஞ்சமாவது அந்தப் பிள்ளையின் பசி தீர்ந்திருக்காதா? தீருக்கின்ற உயிர்பிடுங்கலில் பிள்ளை என்னமாய்த் துடித்துப் போயிருக்கும்? இந்தக் கொடிய சம்பவத்தை படித்துக் கொண்டிருக்கும் போதே, இந்தக் கேள்விகள் அவலமும் – தவிப்புமாய் எண்ணத்தை இடறுகின்றன அல்லவா! எனில், தன் பிள்ளை பசியாறும்போது செத்துப்போன கொடுமையை அந்த மாதா எப்படித் தாங்குவாள்! "என்னுடைய பிள்ளை பசியோடு செத்துப்போய்விட்டதே" என்ற எண்ணமே அந்தத் தாயை காலத்துக்கும் நினைத்து, நினைத்து கலங்கவைக்குமே!

"நீ பறிகொடுத்துப் பரிதவித்த வற்றையே எங்களிடமிருந்து கூச்சம் சிறிதுமில்லாமல் பறித்தெடுக்கிறாய். அப்படியிருக்க, நீ பறிகொடுக்காத ஒன்றை எங்களிடமிருந்து பாய்ந்து, பாய்ந்து பறித்தெடுப்பதை, "நீயும் ஒரு தாய்தானே" என்று உன்னில் ஆத்திரப்பட – ஆச்சரியப்பட, அதில் அப்படி என்ன புதுமை இருக்கிறது"

விதவைராணியின் இராணுவ அராஜகத்துக்குப் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றவயிறுகளின் ஆற்றாமைக் குமுறல் – துயர்தாளாப் புலம்பல் இதுவாகத்தானே இருக்கும்! ○



பூமணி அம்மாவின் பூக்குஞ்சுகள்
கப்டன் லிமா, லெப். கேணல் அருணன்.

## அம்மாவின் பூக்குஞ்சுகள்

அம்மா அழுதாள்
" என்ர பூக்குஞ்சின்ர முகத்தக் காட்டுங்கோ "
புலிப்பிள்ளை இருந்த வயிற்றிலும்
இருக்கின்ற பெட்டியிலும்
அடித்துக் கூவினாள்.

பிண்டச் சிதைவுற்ற குலறைச் செவாய்
அருணன் அம்மாவிடம் வந்தான் ......
இறுக்கிமூடி ஆணிதைத்த பெட்டியில்.

" என்ர ஐயா! என்ர குஞ்சு!
அம்மா கத திறனெக்லே ......
தம்பியவை!
ஒருக்காத் திறவுங்கோ ... "
அம்மாவின் அடிவயிற்று ஓலத்தில்
பெட்டி அதிர்ந்தது.

மனங்கள் இளகினாலும்
பெட்டி இறுகியேயிருந்தது.
தசைக்கந்தலாய்
அருணனை அம்மா பார்க்க வேண்டாம்;
அம்மாவின் பூக்குஞ்சு
பூக்குஞ்சாகவே இருக்கட்டும் அவளுக்குள்.

அம்மா பாவம்!
அவள் எப்படித் தாங்குவாள் இதை.
அம்மாவின் மடிக்கு
இது இரண்டாவது இடி.
அம்மாவின் புலிப்பெண்ணும்
இப்படித்தான்.
அருணன்
மூடுண்ட பெட்டியிலாவது வந்தான்.
அவள் வரவுமில்லை
அவள் செத்த துடக்குத்தான்
வீட்டுக்கு வந்தது.

இரண்டுக்கும் காய்த்துக் குலுங்கிற வயது.
காய்ச்சிப் படைக்கிற கொடுமையில்
போகங்கினாள் அம்மா.

முன்பெல்லாம்
தன் குழந்தைகள் இரண்டு
போராளிகள் என்று
மிடுக்கும் பெருமிதமுமாய்
பூரிப்பாள் அம்மா.
இனியும் என்ன?
தன் குழந்தைகள் இரண்டு
மாவீரர்கள் என்று
மிடுக்கும் பெருமிதமுமாய்
விசும்புவாள் அம்மா!

- எஸ். உமாஜிப்ரான்

✲ ஆனையிறவுச்சமரில் (1990) வீரச்சாவடைந்த லிமாவின் உடல் கிடைக்கவில்லை. கடற்சமர் ஒன்றில் (1998) வீரச்சாவடைந்த அருணன் கிடைத்தான். ஆனால் பார்க்கும்படியாய் இல்லை.



www.eelamview.com

# மழைக்கொதுங்கிய திண்ணையிலிருந்து எனக்கிது என்றானாம் இராப்பிச்சைக்காரன்.

"மாறாத புனல்பாயும் திருக்குளமும்
வயல்வெளியும் வருந்திச் செய்தே
வீறாக என்மரபோற் யோமந்
கோணமலை விமலர்க் கீந்தேன்.
பேறான பெரியோரே இதற்கழிவு
நினைத்தவர்கள் பெட்பு நீங்கி
நீறாகப் போவரிது நிச்சயம் நிச்
சயம் கோண நிமலர் ஆணை."

— யாழ்ப்பாண வைபவமாலை.

"பொன்னகர் நிகரும் கதிரையம் பதியிற்
போயரன் மகவினை வணங்கி
பின்னருக் கிரம சிங்கசேனன் றன்
பெண்ணென விருந்தன ளதன்பின்
மன்னவ னடங்காப் பற்றிவிலேகி
மாநகர் வாவெட்டி மலையிற்
தன்னிக ரற்ற மண்டப மியற்றித்
தனியர செற்றின விருந்தாள்.

— வையாபாடல்.

★ ★

"சிங்களவருக்கு மட்டுமே சிறிலங்கா
வந்தேறு குடிகளுக்கென்ன வழங்கவுண்டு"?
இது: கன்னாபின்னாவெனக் கத்தி
சன்னதமாடும் "சாது" கூறியதல்ல.
தென்னாபிரிக்காவின் தலைநகர் நின்று
அதிகார அணங்கு என அங்கீகரிக்கப்பட்ட
திமிரிலுருவான சந்திரிகாவின் திருவாய் மலர்வு.
பேசிய வார்த்தைகளுக்குப் பூடகப் போர்வையிட்டு
வீசிய அம்பு
அம்பின் நுனியிலும் பூசியிருந்தது நஞ்சு.
ஒப்பனை நீவிய வார்த்தைகளை
இனி உருமறைப்புச் செய்து
குற்றத்தை குறைத்துக் கொள்ள முயலலாம்.
எனினும் எமக்கு
எய்த அம்புதைத்த காயம் பெரிது.
காயத்திருந்து பெய்த குருதி அதிகம்.
வெய்ய வார்த்தைகள் தந்த வேதனை வலிது.
சுருக்கெனத் தைத்த சுடுவார்த்தைகளால்
திடுக்குற்றும் போனோம்.
"சமாதான தேவதை" யின் "சரித்திரப்பிரகடன"த்தின் பின்னும்
அலரி மாளிகையின் அடிப்படிவரை சென்று
சட்டி கழுவிக் கொடுக்கின்றன சில "தமிழுகள்."
தாயின் சேலையுருவிய "சண்டிராணி" யின்
மாயமொழி இவர்களுக்கு "மந்திரஉச்சாடனம்."
நரம்பறுந்த நம்பன்களே உழவுக்கு நல்லதென
கமக்காரி கண்டுபிடித்துள்ளாள்.
வைக்கலோடு வயல்முழுதும் உழுதாச்சு.
மூச்சிரைக்க உழுகின்றன சில "மூதேசிமாடுகள்."
உழுது தொலைக்கட்டும்.
மானவேரறுந்த மனித மரங்களெல்லாம்
ஈன இரைதின்று இலையாட்டுகின்றன.
ஆட்டித் தொலைக்கட்டும்.
தமிழனாய்ப் பிறந்ததே பாவமெனச்
சரித்திரம் தொடர்ந்தும் எழுதுகின்றது.
நக்கிப் பிழைக்கும் நரகல்கள்
எக்கேடாயினும் கெட்டுத் தொலைக்கட்டும்.
சிங்கள தேசத்தின் சீமந்தபுத்திரியே!
வந்தேறு குடிகளென்ற வாயே!
சாந்த சொரூபியெனத் தலைமாற்றிக் கொண்டவளே!
சந்தைக்குச் சரக்குவிற்க வந்த
வந்தேறு குடிகளா எங்கள் வம்சம்?
மழைக்கொதுங்கிய திண்ணையிலிருந்து
எனக்கிது என்றானாம் இராப்பிச்சைக்காரன்.
கலிங்கு வேலியடைக்கவந்த குடிகாரன்
வேலிதனக்கென்று வழக்காடப் போனானாம்.
காற்றாலொதுங்கிக் கரைதொட்ட பரம்பரையா
பூர்வீகம் பற்றிப் பினாத்துவது?
காலாதிகாலமதாய் கையளைந்த எம்மண்ணில்
"வாலை" நாடிருந்துவந்த "லைலா"வா ஆடுவது?
பண்டிருந்து நாங்கள் படுத்தெழுந்த பூமியதை
ஒண்டவந்த பிடாரி உரிமைகொண்டாடுவதா?
அடியடா சக்கை
அம்மன் கோயில் புக்கை.
இலங்கை முழுதும் எங்களுக்கே சொந்தமெனப்
புலம்பித் திரிந்தோமா நாங்கள்?
வந்தேறு குடிகளென வரலாற்றைத் திரித்தோமா?
உங்களுக்கும் மண்ணில் உரிமையில்லை என்றோமா?
இல்லையே.
இலங்கை: இருநாடுகள் கொண்ட ஒரு தீவு.
இதுதானே நாம்கேட்கும் தீர்வு
"வெண்தாமரைக்காரிக்கு" இது ஏன் விளங்கவில்லை?
எங்களுக்குச் சொந்தமானதில் நாங்களும்
உங்களுக்கு நிந்தமானதில் நீங்களும்
சந்தோஷம் கொள்ளத்தானே
அன்று "சமஷ்டி" கேட்டான் தமிழன்.
உன்தந்தை தந்திருந்தால்
இந்தளவு ரத்தம் சிந்தவேண்டி வந்திராது.
தந்தை தரவில்லை.
தாயாலும் தரவில்லை.
அடுத்தடுத்து அரியணையேறிய யாரும் தரவில்லை.
அம்மணி!
"பெரியபடிப்பெல்லாம்" பிரான்ஸிற் படித்தவளே!
அனைத்தும் நமதென்று வாதிடும்
அறியாமை எமக்கில்லை.
ஊரான் வயலையெல்லாம் உழுமாசை எமக்கில்லை.
நாமிருக்கும் பூமி நமக்கு.
நீரிருக்கும் பூமி உமக்கு
நல்ல அயலவராக நாமிருப்போம்.
மூத்தைக் குடியென்றும்,

## உலைக்களம்

— வியாசன் —

வந்தேறு குடிகளென்றும்;
பீற்றலும், புலம்பலும் உனக்குப் பெருமைதராது.
தேற்றிருந்த வாழ்விழந்து நெடுமூச்சுவிட்ட எங்களுக்கு
தேற்றுதலளிப்பாயெனத் தேறியிருந்த போதுதான்
நீ கூற்றுவனாகக் குதித்தாய்.
குடிகலைத்தாய்.
நாற்று வயலையெல்லாம் நாசமுறச் செய்தாய்.
இன்று: வந்தேறு குடிகளென வரலாற்றைத் திரிக்கின்றாய்.
சமாதான நர்த்தகியெனச் சதங்கை கட்டிய நீயும்
கசங்கிப்போன பழைய உடுப்புடன்தானே
காட்சி தருகின்றாய்?
இந்த மாவலித்தீவு தீவாக முன்னரே
நாங்களிங்கு வாழ்ந்திருந்த கூட்டத்தின் வம்சம்.
இங்கு முளைத்த முதல் மரத்துக்கே நீரூற்றியவர்.
ஆறுகளுக்கு அணைகட்டிய ஆரம்பமனிதர்.
கந்தரோடையிற்கிடைக்கும் "ஈமத்தாழி"களுக்குச்
சொந்தக்காரர்.
முதுமனிதகூட்டத்தின் முற்றம் இதுவானால்
அதுவும் எமதாகும்.
"தமிழ்பௌத்தத்தை" எம்முந்தையர் சார்ந்திருந்தனர்.
சிலப்பதிகாரமும்,
மணிமேகலையும் சொல்லும் திருநகர்கள் எமதே.
கொம்பு செவியைமறைத்தல் கூடாது.
அளவுகோல் பிழையானால்
விளைவுகள் விபரீதமாகும்.
மூத்தைக்குடியென்று உம்மையும்
வந்தேறுகுடிகளென்று எம்மையும் வகைபிரித்தல்
நன்றல்ல .... நன்றல்ல .... நன்றேயல்ல.

✶ ★

" வஞ்சமேதி சுறாக்களைச் சிறிடச்
சுறாக்களோடிப் பலாக்கனி சிறிவே
இஞ்சிவேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடதே."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com